ஞாயிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிடநாடு

மலர் 3. இதழ் 28.

## நான்!

"நான் இந்த ஜஸ்டிஸ் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு என்னென்ன கூறினேன், என் திட்டங்கள் யாவை, என் கருத்துகள் எவ்வழி செல்கின்றன, என்பனவைகளைத் தெரிந்தேதான் உள்ளீர்கள்.

ஜஸ்டிஸ்கட்சியின் பழய தலைவர்களுக்கு என் கருத்துகள் பிடிக்காதிருக்கலாம். ஆனால் நான் என் கருத்துகளை 15 ஆண்டுகளாக நாட்டிலே கூறி வந்துள்ளேன். அதை அறிந்தே தான் என்னைத் தலைவனாக இருக்கும்படி பணித்தார்களேயன்றி நான் யார் என்பது தெரியாமலோ, தெரிந்து கொள்ள முடியாதபடி நான் யாரையேனும் ஏமாற்றியோ, யாருக்காவது ஏதாவது நிபந்தனை கொடுத்தோ இந்தத்தலைமைப் பதவியைப் பெறவில்லை."

அருப்புக்கோட்டையில் 16—7—39ல் நடைபெற்ற, இராமநாதபுரம் ஜில்லா மூன்றாவது தமிழர் மாநாட்டில்,

பெரியார் பேசியது.

கற்பனைச் சித்திரம்.

# ★ ஜஸ்டிஸ் ஜானகி.

ஜஸ்டிஸ் ஜானகி, வேகமாகக் காரைச் செலுத்திக்கொண்டே, சைனாபஜாரிலே போவது கண்டு, நான் ஆச்சரியப்பட்டேன். அவர் அவசரப்படும்படியான அவ்வளவு முக்கியமானகாரியம்என்னஇருக்க முடியும் என்று யோசித்தேன். ஓ! என்னசிந்திக்கிறீர்கள்! ஜானகி என்று கூறிவிட்டு, அவன் என்று சொல்கிறேனே என்ன இது என்று யோசிக்கிறீர்களா! தவறிச் சொன்னதல்ல. ஜானகி, பெண்ணல்ல, ஜானகிராம் என்பதன் சுருக்கம், ஆண்தான்! என்ன நடந்தாலும் ஜஸ்டிஸ் கட்சியிலேதான் சார், நான் இருப்பேன், வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் என்று கூறுவார் ஜானகி, எனவேதான் அவருக்கு ஜஸ்டிஸ் ஜானகி என்று நண்பர்கள் பெயரிட்டனர். பத்திரிகைகளிலேகூட அதுபோல எழுதினர்.

ஜஸ்டிஸ் ஜானகியின் பிராண சிநேகிதர் ஜமதக்னி ஐயர், இருந்தால் என்ன! ஜமதக்னி ஐயராக இருந்தாலும், ஜானகி விஷயத்திலே கொஞ்சம் அக்கறைஉண்டு, எனவே நட்பு இருந்தது. ஊரிலே பல வதந்திகள், உலைவாயை மூடலாம், ஊர் வாயை யார் மூடுவது? ஏதோ இருவரும் பால்ய சிநேகிதர்கள், காரணத்தை நாம் ஏன் கிளறவேண்டும், எந்தப்புற்றிலே எந்தப்பாம்பு இருக்குமோ யார் கண்டார்கள்?

ஜஸ்டிஸ் ஜானகியின் அன்றைய அவசரத்தின் காரணத்தைக் கவனிப்போம், மோட்டார், ஜவ்வாதுக் கடையிலே நின்றது, கடைக்காரர் மரியாதையாக அவரை வரவேற்றார்.

"வரவில்லையா இன்னும்?"

"யாரைக் கேக்கறிங்க?"

"ஜமதக்னி"

"அவருங்களா? வந்து போனாருங்க,'

"சரி! நல்ல ஜவ்வாது, அத்தர், வேண்டும்"

"நல்லதா கொடுக்கச் சொல்றிங்களே. அது என்ன பேச்சிங்க? மனசை ரொம்ப புண்ணாக்குதுங்க அந்தப்பேச்சு! எப்போதாவது நான் உங்களுக்குக் கெட்ட சரக்குக்கொடுத்ததுண்டா? என் கடையிலே, கெட்ட சரக்கு ஏது?"

"அதற்கல்ல! அத்தரும் ஜவ்வாதும் ஒரு விசேஷமான காரியத்துக்குத் தேவை, வஸ்து ரொம்ப நன்றாக இருக்கவேணும் இதை நான் தரப்போகிறேனே அந்த ஆசாமி ரொம்ப டிப்டாப் பேர்வழி"

"கொண்டுபோய்க் கொடுங்கோ, ஆசாமி எவ்வளவு டிப்டாப்பா இருந்தாலும், கப்சிப்புன்னு ஆயிடுவார் பாருங்கோ"

★

பொட்டிலத்துடன், புன்னகைத் தவழும் முகத்தோடு ஜஸ்டிஸ் ஜானகி, காரிலே ஏறினார் செலுத்தினார் நேரே ஜரிகை மாலைக் கடைக்கு. பெரிய மாலை வாங்கினார், கார் மறுபடியும் புறப்பட்டது. பங்களா போய்ச் சேர்ந்தார், அங்கே ஜமதக்னி இருந்தார்.

"ஏண்டா ஜானகி! ரொம்ப நேரமாயிடவே நான் நேரே பங்களாவுக்கேவந்து விட்டேன், சரி, நான் சொன்னதெல்லாம் வாங்கினயோ?"

"ஆஹா! இதோபாரேன்"

"பேஷ்! ஜரூராத்தான் காரியம்நடத்தியிருக்கே. இதைப்போல முன்பே செய்திருந்தா இன்னேரம் ராவ்சாகிப் பாகி இருக்கலாம்"

"வஸ்து எப்படி?"

"ஓஹோ! நீயே கடை வீதி போறதுன்னா, வஸ்து நன்னாயிராமேபோகுமா? ஆமாம், சிகரெட்டின்கள் எங்கே?"

"அடடா! மறந்தேபோயிட்டேனப்பா!"

"நல்ல ஆள்தான்! அந்த ஆசாமிக்கு அதுதானே அப்பா உயிர்மாதிரி. சிகரெட்டின்னைக் கையிலே வைத்துக் கொள்ளாமே செகரடேரியட்டுக்குள்ளே போக மாட்டானே மனுஷ்யன், எது முக்யமோ அதை மறந்துவிட்டு விடறே"

"போகும்போது வாங்கிக் கொள்வோம்."

"சரி! அறிக்கையைப் அடிச்சாச்சோ?"

"நீவராமே அறிக்கை எப்படித் தயாராகும். இதோ டைப்பீஸ்டைக் கூப்பிடறேன், நீ சொல்லு, அவன் டைப் அடிச்சு விடுகிறான் நம்ம டைப்பிஸ்ட் ரொம்ப கெட்டிக்காரன்!"

"நம்ம நரசிம்மாச்சாரி மகன்தானே, நல்ல பையன்தான்! அவனுடைய துரதிர்ஷ்டம் இங்கே டைப்பிஸ்ட்டா இருக்கான். அவனுடைய அத்திம்பேர், அசாமிலே பெரிய அதிகாரி"

"சீனுவாஸ்! வாசன்! சீனு!"

டைப்பிஸ்ட் வருகிறார், வந்ததும் ஜமதக்னியைக் கண்டு நமஸ்கரித்துவிட்டு, நிற்கிறார். ஜமதக்னி அறிக்கை தயாரிக்க ஆரம்பித்துவிட, ஜஸ்டிஸ் ஜானகி, பத்திரிகையிலே சினிமாப் பகுதியைச்சுவைக்கிறார்.

## ஜஸ்டிஸ் ஜானகி அறிக்கை. சண்டே அப்சர்வருக்குப் பாராட்டுதல்.

சமீபத்திலே சேலத்திலே நடைபெற்ற ஜஸ்டிஸ் மாகாண மாநாட்டைப்பற்றிய செய்திகளைக் கண்டு, சித்தம் சோர்ந்து போனேன். சில சுயமரியாதைக்காரர்கள், ஒரு பெரிய கட்சியைக் குட்டிச்சுவராக்கிவிட்டதைப்பார்க்க, என்போன்ற பார்ப்பனரல்லாதாருக்கு உள்ளம் பதைக்காமலிருக்க முடியுமா? நாங்கள் அருமையாக வளர்த்தகட்சியை நாயக்கர் கூட்டம் நாசம் செய்வதா.? இதை நாங்கள் எப்படிப்பொறுப்போம்.

சேலம் மாநாட்டை நான் வன்மையாகக்கண்டிக்கிறேன். இந்த சமயத்திலே, தைரியமாகச் சண்டே அப்சர்வரின் பேராசிரியர், ஜஸ்டிஸ் கட்சியைக் காப்பாற்றக்கங்கணம் கட்டிக்கொண்டது பற்றி நான் பாராட்டுகிறேன்.

ஜஸ்டிஸ் கட்சிக்கு திராவிடர் கழகம் என்று பெயரிட்டது, துரோகம். இதனை நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம். நாங்கள் ஒருவரும் சேலம்போகவில்லை. இதிலிருந்துஅந்தமாநாடு, பிரதிநிதித்வம் வாய்ந்ததல்ல என்பது விளங்கவில்லையா? ஆகவே, இனி சண்டே அப்சர்வர் ஆசிரியரின் முயற்சிக்கு யாவரும் ஆதரவளிக்கவும். இப்படிக்கு,

ஜஸ்டிஸ் ஜானகி (திவான் பகதூர் திருவேங்கிடப் பிள்ளையின் மருகர்.)

அறிக்கையிலே ஜஸ்டிஸ் ஜானகி கையொப்பமிட்டார், களிப்போடு.

"இப்போதே, உன் முகத்திலே ஒரு புதினுசான சோபிதம் காணப்படுகிறது. இருக்காதா! இனி நீ, ராவ்சாகிப் ஜானகிராமனல்லவா! பிறகு விருந்து நடைபெறும். பார்ப்பனரல்லாத சமூகத்துக்காக நீசெய்தசேவைகளைப்பற்றி எல்லாம் பல பேர் பாராட்டிப்பேசுவார்கள். நீயும் பிரமணனை வெளுத்துவாங்குவாய் உன் பிரசங்கத்திலே" -

"போடா ஜமதக்னீ! நீதானா கேலி செய்வது, ஆகவேண்டியகாரியத்தைப் பார்க்காமல்"

மறுபடியும் மோட்டார் கிளம்பிற்று, மௌண்ட்ரோட் பக்கம்.

(12-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை,

★

சௌமியன்.

# பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:—பார்வதியின் அன்புக்குப் பாத்திரமான குமார்மீது பழிசுமத்திய பார்த்திபன் என்ற கபடன், லோபி ஆலாலசுந்தரரின் சொத்துமூலம் நாட்டுக்குத் தலைவனாகலாம் என்று மனப்பால்குடிக்கிறன். அவன் நடத்திய மாநாட்டிலே பார்வதியால் கலகம்விளைகிறது. அவனால் நிராகரிக்கப்பட்ட ஜெயா எனும் தாசி, எழுதிய கடிதத்திலே, குமார்பற்றிய தகவல் கொஞ்சம் தெரிகிறது. பார்வதி, தன்சினேகிதி லலிதாவுடன் அதுபற்றி ஆலோசிக்கிறள், அவர்களை அக்கிரமமாகப் பேசி அனுப்புகிறன் பார்த்திபன். அவன் தங்கியிருந்த ஒட்டல் சொந்தக்காரரான சங்கர ஐயர், பார்த்திபனிடம் பேசுகிறர் பிறகு...........]

திக்கற்றோர் திருச்சபையிலே சொற்பொழிவாற்றச்சென்று, அங்கு, பார்த்திபன் பஞ்சிக்கஞ்சாப்பாவிகளுடன் இருந்துகொண்டு, எசக்கண்ட, பார்வதிக்குத் திகில் அளவுமீறிப்பிறந்தது. என் செய்வாள் பாபம்! வாதமிடத்தெரியும். விளக்கமுரைத்திட அறிவாள், மேற்கோள் தருவாள், அரிவாளுங் கையுமாக முரடரும், அவர்களை ஆட்டிவைக்க ஆணவக்காரனும்இருந்த அந்தஇடத்திலே,தேவை அவைகளல்லவே! அடிபடவும் அடிகொடுக்கவும், வெட்டுவரின் தடுக்கவும் கிட்டேவருவோரை விரட்டவும் வித்தையும், நெஞ்சுறுதியும் தேவை. புலி நுழைய வேண்டிய குகைக்குள்ளே புறு சென்றுவிட்டது! பார்த்திபன் பிறப்பித்த கட்டளையின்படி, கழுத்தைப் பிடித்து உள்ளே தள்ளப்படுமுன்னம், தானகவே உள்ளே சென்றுவிடுவதே யுக்தம், என்று பார்வதிக்குத் தோன்றிற்று. சாகசப்பேச்சினல் இனிப்பார்த்திபனிடமிருந்து தப்பித்துக்கொள்ளமுடியாது என்பது பார்வதிக்குத்தெரிந்துவிட்டது, ஏனெனில் முன்பு அந்த வித்தையை அவன் பார்த்துவிட்டவன். எனவே இம்முறை ஏமாறமாட்டான். அவன், துணிவுடன், சகல முன்னேற்பாடுகளுடன் நடந்துகொண்டிருப்பதைக் கண்ட போது பார்வதிக்குப்பயம், மிகஅதிகமாயிற்று. திக்கற்றோர் திருச்சபைஎன்று சாக்குக்கூறி, வரவழைத்துத் தன்னைக் கொன்றுபோடவே, பார்த்திபன் தீர்மானித்திருக்கிறன் என்பது தெரிந்தது. கொலைக்கஞ்சாக் கொடியர்கள் குடிவெறியுடன்இருந்தனர். சுற்றிலும்வெட்டவெளியே; கூவினலும் கோவெனக்கதறினலும், உதவிக்குவருபவர் எவரும் இல்லை. தப்பித்துக்கொள்ளமுடியாத நிலைமையிலே பார்வதி சிங்கிக்கொண்டாள்.

"பார்வதி! உன்னுடைய அழகான சொற்பொழிவைக்கேட்கஆவல்கொண்டுதான், உன்னை இங்கு வரவழைத்தேன்!

திக்கற்றோரின் நிலைமைபற்றித் தேன்மொழியில்பேசுவாய், கேட்டுஇன்புறலாம் என்றுதான், இங்குஅழைத்துவரச்சொன்னேன். என்! இப்படி மிரள மிரளவிழிக்கிறய்! ஓஹோ! திக்கற்றவர்கள் படும் பாடுபற்றி நினைக்கும்போதே உன்நெஞ்சிலே துக்கம்வந்து அடைத்துக்கொள்கிறதுபோலும்! இருக்கும், இருக்கும்! ஏழைகளைக்கண்டால்தான் உன்மனம், அனலிடு மெழுகாகுமே! சமதர்மச் சுந்தரியல்லவா நீ, மார்க்ஸை மணனம் செய்யும் மங்கையல்லவா.

அதோபார், அவர்கள் சிரிக்கிறர்கள், என்னடா இது, பிரசங்கம்செய்யவந்த அம்மையாருக்கு, இவர் பிரசங்கம் செய்கிறரே, என்று.

கள்ளீ! ஏன் மரம்போல நிற்கிறய். உன்னைச் சூழ்ந்திருக்கும்ஆபத்துத்தெரியவில்லை? உயிரை இழக்கப்போகிறதை உணரவில்லையா, அல்லது பயம், உன் உணர்ச்சியையே போக்கிவிட்டதா?

அடிபார்வதி! உனக்கு நான் எவ்வளவு சொகுசான வாழ்வு அளித்தேன்; என் பங்களாவிலே உனக்கு உணவு, என் பக்கத்திலேஇருக்கும் உல்லாசம், மாலைகள், வரவேற்புகள், விருந்து, உபசாரம், இவ்வளவும் உனக்குத்தந்தேன். அரசனுக்கு அரசிமேல் ஆசை, அரசிக்கு ஆண்டிமேல் மோகம் என்பதுபோல், உன்னைநேசித்த என்னை வெறுத்துவிட்டு, ஒரு உடுக்கையைவிரும்பினயே! என்பாதையிலேகுறுக்கிடாதே. அழிவாய் என்று எச்சரித்தேன், கேட்டாயா?

எனக்கு அவமானத்தைத் தேடினய், என் திட்டங்களைத்தகர்க்க ஏற்பாடுசெய்தாய், ஊமையா நீ? பேசவாயில்லை? சாகசமாக நடந்துகொண்டால் நான் சாய்ந்துவிடுவேன் என்று எண்ணிக்கொண்டாயல்லவா, அந்தத் துஷ்டச்சிறுக்கி, லேடிடாக்டரைவிட்டு என்னைக் கேவலப்படுத்தினய், நீ எனக்குச் செய்திருக்கும், கேடுகள் பல. என்கனவுகளைக் கலைத்தாய், என்வாழ்வைக் குலைத்திட வேலைசெய்தாய்.பார்வதி! பார்த்திபனை நீ யார் என்று தெரிந்துகொள்ளவில்லை. நீ பிணமாகுமுன், நான் யார்என்பதைத் தெரிந்துகொள்.

அதோதெரிகிறதே, கோணிப்பைகள், அவைகளிலே,உன் அங்கங்கள் வேறுவேருகத்துண்டிக்கப்பட்டு, போடப்படும்,

என்னை மோகவலையிலே வீழ்த்திய முகம், அதற்கு அலங்காரமளித்த அந்தக் கண்கள், என்னைப் பித்தனுகும்படி சிரித்துக்காட்டுவாயே அந்த முத்துப் பற்கள், அடி, பார்வதி, அழகு ததும்பும் உன் அங்கங்கள், அழுகிப் புழுத்துப் போகப்போகின்றன. ஆம், உன்னை அணைத்துக்கொண்டு ஆனந்தமாகவாழத் தான் நினைத்தேன், நீஅழிய அச்சாரம் வாங்கிக்கொண்டாய்.

சாகப்போகும் உன்னிடம் நான் என் என் கோபத்தைக்காட்டவேண்டும். ஒழிந்துபோ, உனக்கும் ஓய்வு-பரிபூரண ஓய்வுகிடைத்துவிட்டது, எனக்கும் தொல்லைவிட்டது என்று ஆகிவிடும்.

உன் கண்களைக்கட்டிவிடுவார்கள்-அது என் உத்தரவு—வாயிலும் துணியை அடைத்துவிடுவார்கள். பிறகு, அவர்கள் தங்கள் கடமையைச்செய்வார்கள். பார்வதி, பேசித்தொலை, ஏன் இப்படிச்சிலைபோலநிற்கிறய். கண்களினின்றும் வழியும்நீரைத் துடைத்துக்கொள்.

ஏன், என்ன சங்கதி, ஏன் இப்படி ஆடுகிறய் பூங்கொடிபோல். கண்ணை ஏன் மூடுகிறய், அடஅடா, சாய்கிறளே, மயக்கமா, ஓஹோ, மூர்ச்சையாய்விட்டாள்,"

பார்த்திபன், கோபவெறியால், பேசிடக்கேட்ட பார்வதி, மூர்ச்சையாகிக் கீழேவீழ்ந்தபிறகே, அவன் தன்னுடைய பேச்சை நிறுத்தினன். அவனுடைய கையாட்களிலே ஒருவன், கொஞ்சம் தண்ணீர்கொண்டுவந்து பார்வதியின் முகத்திலே தெளித்தான், ஒருவன் மேல்வேட்டியால் வீசினன் காற்றுவருமென்று, மற்றவர்கள், "பீதி அடைந்துவிட்டாள்" என்று கேலிபேசினர். பார்த்திபன்,இந்த நேரத்திலே தன் கைப்பெட்டியைத் திறந்து, பிராந்திஎடுத்து, மளமளவென்று இரண்டொரு முழுங்கு குடித்தான், பிறகே கொஞ்சம், உறுதி மீண்டும் வந்தது. பேச்சிலே பழையமுறைக்குத் தோன்றிற்று. சிவந்த கண்களுடன், சீற்றமே உருவான பார்த்திபன், கீழேகிடந்தபார்வதி அருகே வந்தான், "இவள் எனக்குச்

(4ம் பக்கம் பார்க்க)

# பார்வதி பி. ஏ;

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

செய்திருக்கும் துரோகத்தை நினைத்தால் இப்படியே, இவள் மயக்கமாகக்கிடக்கும் இந்தச்சமயத்திலேயே இவள் கழுத்தின் மீது என் காலைவைத்து, என் ஆத்திரம் தீர மிதித்துத்துவைத்துச்சாகடிக்கலாமா என்றும், தோன்றுகிறது.

எழுப்புங்கள் கள்ளியை! ஒருவேளை பாசாங்குகூடச் செய்வாள்! முகத்திலே ஒரு செம்பு தண்ணீரைக்கொட்டு. இவ்வளவு இளவயதிலே, எவ்வளவோசுகமாக வாழவேண்டியவள், தன்னுடைய வீண்பிடிவாதத்தால், மடியப்போகிருள்! அழகியாயிற்றே, படித்திருக்கிருளே, அபலையாக இருக்கிருளே, ஏதோ இவளைக் காப்பாற்றுவோம், என்று கருணைகாட்டினுல், இவள் நமக்கு உபதேசம் செய்வதும், நம்மிடமே வம்புக்கு வருவதும், நமக்கேஆபத்துத்தேடுவதுமாகவல்லவோ ஆகிவிட்டாள்.

கண்ணைத்திறக்கிருளா!, பார்வதி! ஏ, பார்வதி, பார்வதி, என்ன மிரளுகிருய், நினைவா, கனவா என்று பார்க்கிருயா? கண்களை நன்ருகத் துடைத்துக்கொள், நினைவுதான், கனவல்ல.

பேசுவது பார்த்திபன், குரல் தெரியவில்லை. பார்த்திபன், ஆமாம்! உன்னிடம் மரணவாக்குமூலம் பெறவந்திருக்கிறேன், எ ழு ந் தி ரு டி, ஏமாற்றுக்காரச்சிறுக்கி. வேண்டாம் வேண்டாம், படுத்துக்கொண்டுதான்கிட, சில நிமிஷங்களிலே சாகப்போகிறவள்தானே, எப்படிக் கிடந்தால்தான் என்ன?

பார்த்திபனுக்குக் கோபமும் குடிவெறியும் கூட்டாகிவிட்டதால், மேலும் மேலும் ஆபாசப்பேச்சு வழிந்துவரத் தொடங்கிற்று. பார்த்திபனுல் கூலிக்கு அமர்த்தப்பட்ட அக்கொலைபாதகர்கள், காரியத்தைச் சீக்கிரம் முடித்துவிட்டு, ஓடிவிடவேண்டும் என்று கூறினர். ஒருமுறை கண்களைத் திறந்த பார்வதிக்கு மறுபடியும் மயக்கமேலிட்டது. அதே சமயத்திலே, அவளுடையகைகால்களைக் கட்டி,வாயில் துணி அடைத்துவிட்டனர். அரிவாளால் வெட்டுமுன், உயிரைப் போக்கிவிடுவது நல்லது என்று ஒருவன் யோசனைகூறினுன். வெட்டியே உயிரைப்போக்கலாமே என்ருன் மற்ருெருவன். விஷம்கொடுத்துவிட்டிருக்கவேண்டும் என்ருன் வேருெருவன், கல்லைக்கட்டிக் கிணற்றிலே போட்டுவிடவேண்டும் என்ருன்இன்னுெருவன். பார்த்திபனுே, குடித்துக்கொண்டே இருந்தான், அவனுடைய மனதிலே, தான்செய்ய இருக்கும் காரியம் திகிலைக்கிளப்பிவிட்டதால், அந்தத்திகிலை அடக்கக் குடிப்பதுதான் தக்கவழிஎன்று அவன் எண்ணிஞன். அதிகம் குடித்து வெறியேறிவிட்டால், நிலைமை தவறி ஏதேனும் தாறுமாருகப் பேசியோ, செய்தோ, தங்களுக்குஆபத்து உண்டாக்கிவிடுவானுே என்னயோஎன்று அந்த முரடர்கள் பயந்தனர். இதற்கிடையில் பார்வதிக்கு மயக்கம் கொஞ்சம் தெளிந்து, கண்களைத்திறந்தாள், எழுந்திருக்க முயன்ருள், முடியவில்லை, வாயிலே துணிஅடைத்திருக்கக்கண் டா ள், நிலைமை அவள் நினைவுக்கு வந்தது, என் செய்வாள். தன்னைக் கொன்றுவிடப் போகிருர்கள் என்பதும், அந்த ஆபத்தினின்றும்மீள ஒருவழியும் இல்லைஎன்பதும் தெரிந்ததும், அவளுக்குண்டான திகைப்பு, விவரிக்கத்தக்கதன்று. "ஆகட்டும், கா ரி ய த் தை முடித்துவிடுங்கள்" இதோ, ஆளுக்குக்கொஞ்சம் போட்டுக் கொள்ளுங்கள்" என்றுகூறிப்பார்த்திபன் கொலைகாரர்களுக்குக் குடிவகைகொடுத்தான். அவர்களும் ஆனந்தமாக முடித்துக்கொண்டே பாவம் புண்யம், நரகம் மோட்சம், விதி, முதலியனபற்றிக் குளறலாயினர்.

" நெருப்புக்குழியிலே தள்ளுவார்களாம், பத்துத்தலைப் பாம்புகள் அ தி லே இருந்துகிளம்புமாம்"

"சுத்தக்கட்டுக்கதை. மிரட்டுவதற்காக எவனுே கட்டிவிட்டான்"

"அப்படித்தான் நரகத்திலே தள்ளினுல்தான் நமக்கென்னடா. நாம் செத்துப்போன பிறகுதான் இது நடக்கும், அப்போ பார்த்துக்கொள்வோம். இருக்கிறவரையிலே சுகமா இருக்கவேண்டும்"

"அவ்வளவே தாண்டா"

கொலைகாரர்கள், தெளிவாக மேற்கொண்டு பேசமுடியாதபடி, போதை ஏறிவிட்டது.

பார்வதியைக், கழுத்தை முறித்துக் கொன்றுவிடுங்கள் முதவில்,பிறகு துண்டு துண்டாகவெட்டி அடையாளம் தெரியாதபடி செய்துவிடலாம், என்று,பார்த்திபன்கூறிஞன்.

"தொரே! ஆபத்துவராமே பார்த்துக் கோங்கோ, நாங்க, இதுபோலபலவேலை செய்திருக்கிருேம், ஆனுலும், இந்தப் பொம்பளையைப்பார்த்தா, ரொம்ப அழகாகவும், பெரியஇடத்துக் குட்டியாகவும் தெரியுது. வம்பிலே மாட்டிவிட்டுவிடாதிங்க" என்று ஒரு போதைக்காரன் சொன்ஞன் பார்த்திபனைப்பார்த்து.

ஆளுக்கு ஐந்நூறுவீதம், ஆறுபேருக்குக்கொடுத்து அழைத்துவந்திருக்கிருன் பா ர் த் தி ப ன். அரிவாளைத்தீட்டிக் கொண்டு, அவர்களிலே ஒருவன் இது போலப் பேசவே பார்த்திபனுக்கு ஆத்திரம் அதிகமாயிற்று.

"வேலை ஆகட்டும், எனக்குத் தெரியும் நீங்கள்யார் என்று. ஆபத்து வராதபடி பார்த்துக்கொள்ளமாட்டேனு. சீக்கிரம் முடியுங்கள். நான் இதற்கெல்லாம் தகுதியாக முன்னேற்பாடுகள் செய்யாமலா இருப்பேன்" என்று பார்த்திபன்கூறிவிட்டு, மனதிற்குள்ளாக அவர்களைத்திட்டிஞன்.

" எல்லாம் ஐயா, பார்த்துக்கொள்வாரு, ஆகட்டுண்டா" என்ருன் மற்ருெருவன். அவர்களிலே அதிக தைரியசாலியான ஒருவன் "அடே என்னப்பா, இந்தக்காரியத்துக்கு இவ்வளவு யோசனை, கோழிக்குஞ்சை முறிச்சிபோடறதுபோலே ஆகவேண்டிய காரியம், இதுக்குஇவ்வளவு பிரமாதப்படுத்துகிறீங்க" என்று கூறிஞன்.

கொலைகாரர்களுக்குத் தலைவனுகயிருந்தவன், அதாவது திக்கற்ருேர் திருச்சபையின் செயலாளனுகநடித்துப்,பார்வதியை அங்கே அழைத்துவந்தவனுக்கு, திடீரென ஒருயோசனை தோன்றிற்று, விபரீதமான ஆசை உண்டாயிற்று. பார்வதியைக்கொன்றுபோடுமுன்பு, அவளை ஒருமுறையாவது அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆசை தோன்றிய மறுவிநாடி வெறியாகிவிட்டது, எப்படியாவது தன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்துவிட்டுத்தான், அவளைக் கொல்லவேண்டும் என்று தீர்மானித்துவிட்டான். தங்கள் தலைவன், தலையைச் சொறிவதும், மேலும் கீழும்பார்ப்பதும் உலாவுவதும், பார்வதி அருகே சென்று நிற்பதும், பெருமூச்சு விடுவதுமாகஇருக்கக்கண்ட, மற்றவர்கள், இதேது, இவருக்கே, பயம்பிறந்துவிட்டதா, என் று யோசித்தனர். பார்த்திபனுே, சீக்கிரம் காரியத்தை முடித்தாகவேண்டும் என்று துரிதப்படுத்தலாஞன். தன் மனதிலே எழுந்த எண்ணமோ. பிறருடன் சொல்லக்கூடியதல்ல. என்ருலும், எப்படியும், மனதிலே தோன்றிய ஆசையை நிறைவேற்றிக்கொள்ளாமலிருக்க அவனுக்குத் துளியும் இஷ்டமில்லை. என்ன யுக்தி செய்து, தன் எண்ணத்தை முடித்துக் கொள்வது என்று யோசிக்கலாஞன்.

உயிரைப்போக்கத் தன்னைச்சுற்றி ஆட்கள் இருப்பதைப் பார்வதி உணர்ந்தாளேதவிர, கொலைசெய்யவந்தவர்களிலே ஒருவனுக்கு அவளைக்கூடவேண்டுமென்ற வெறிபிடித்துக்கொண்ட விஷயத்தை அவள்அறியாள். அவளுக்குப் பாதிஉயிர் போய்விட்டது.

"நீங்கள் யாவரும் தோட்டத்துப்பக்கம் போயிருங்கள். நான் காரியத்தை முடித்துவிட்டுக் கூப்பிடுகிறேன்" என்று காமவெறிபிடித்தவன் கூறிஞன்.

"ஏன்? என்று பார்த்திபன் கொஞ்சம் கோபத்தோடு கேட்டான்.

(10ம் பக்கம் பார்க்க)

# தமிழணங்கு.

ஆ. ஷரபுதீன்.

ஆழிசூழுலகில் அமைந்துள்ள மொழிகளுள்ளே தாயகமாய் விளங்குவது நம் தமிழ்மொழியேயாம். இம்மொழியைத்தான், "தமிழணங்கு" என்று கூறுவர். தமிழ்நாட்டில் ஆதியில் தமிழ்மக்களே வாழ்ந்துவந்தனர். அவர்கள்பால் தனித்தமிழே நிலவியிருந்த அக்காலத்தில் புலிக்கொடிபொலிய, மீன்கொடிமிளிர, விற்கொடிவிளங்க அறனும் ஆற்றலும் படைத்த தமிழ் மன்னர்கள் செங்கோலோச்சிய அக்காலத்தில் எழிசையாய் இசைப்பயனுய்த் தமிழணங்குதாண்டவம் புரிந்தாள்.

நம் தண்டமிழ்ச்செல்விச் சீறுவைச் சிகைக்கணியாகவும், திருக்குறளைச் செங்கோலாகவுங்கொண்டு தம்மின்மிக்காரும் ஒப்பாரும் இல்லையென்றுரைக்கச் செங்கோலாச்சினுள். பின்னர் வடநாட்டு மக்கள் தமிழ் நாட்டிற்குடிபுகுந்தனர். அவர் வழங்கியவடமொழியும் அவரோடுபோந்து தமிழ் நாட்டில் இடம்பெற்றது. வடவரும் தமிழரும் கலந்து உலவத்தொடங்கியதும் வடமொழியும் தமிழுடன்கலந்து வழங்கப் பெறலுதாயிற்று.

கதிரொளியை ஓர் கார்மேகம் மூடியதுபோல், மாசற்றமங்கையாய நம் தமிழணங்கை வடமொழியென்னும் மலினங்கள் மறைத்தன. அந்தோ! எத்திசையும் புகழ்மணக்க இனிதிருந்த தமிழணங்கு திகைத்தாள். அவளுடல்நலிந்தது. இலக்கியஉலகம்இருண்டது. தமிழிசைதளர்ந்தது. நாடகக்கலைசிதைந்தது. அணங்கின் அரியாசனம் ஆடியது. அவள்முடி விழுந்தது. செங்கோல் முறிந்தது, தமிழணங்கின் அல்லலை அகற்றுவது யார்? அக்காலத்தமிழர்களோ வடமொழிவேட்கையால் தாமியற்றும் யாப்புகளிலே வடமொழியையும்கலந்து யாத்தனர்.

இன்றைய ஆங்கிலம்கற்ற தமிழர்களோ தாம் தமிழ்மொழியில்பேசுவது இழிவு என்றெண்ணி ஆங்கிலத்தையேபேசுகின்றனர் அன்றியும் தமிழ்பேசுபவரை இகழ்கின்றனர். "ஓ! ஆங்கிலம்கற்ற தமிழா! நுமதுபிறப்புமொழியுணர்ச்சிஎக் காற்றில்பறந்தது. அன்றி எக்கள்வன் கொள்ளைகொண்டான்? நீ நும்சொந்த மொழியில்பேசத் தயங்குகிறாய். அம்மொழியை நீ இகழ்கிறாய். பிறமொழியாளன், தனதுமொழியை அடிப்படையாகக்கொண்டு தனக்குப்பெயர் அமைத்துப் பெருமைகொள்கிறான். நும்மை நீவிர்யாவர் என்றறைந்தாலோ அதற்கு மறுமொழியாக "நான் சைவன், வைணவன், கிருட்டினன், சமணன்" என்று நும் சமயங்களைமட்டும் புகழ்ந்துரைத்தால் நும்முத்தமிழ் வளர்வது எங்ஙனம், நும் நாடு முன்னேறுவது எங்ஙனம். தமிழரே உணர்வுடன் வாழ்மின்.

அந்தோ! அன்னவரின் அறியாமையால் அன்னை அல்லலுறுகிறாள். கண்ணீர்த்துளிகள் கன்னத்தில் வழிந்தோடக்கதறி நிற்கின்றாள். ஆவி துடிக்கக் கூவியழைக்கிறாள் தன் அருமந்த மக்களை "என்மகனே மலையாள மாதும், கன்னடக் கன்னியும், தெலுங்குத் தேவியும், வங்கவனிதையும் என்னைக்கண்டு ஏளனம் செய்யாரோ. இன்றுவரை உலகிலே மொழியரசியென மொழியப்பட்ட நான் மூலையிலே கிடந்துமுணுமுணுப்பதோ? வீரத்தமிழா தூக்கத்தைத் துரத்து. ஊக்கம் கொள். தமிழ்ப்பயிருக்கு ஆக்கம் தேடு. அது நின் யோக்கமாக இருக்கட்டும். தமிழ்ப் பூஞ்சோலை வாடி வதங்குகிறது. நறுமணங்கமழ்பூக்கள் பொலியும் பொழிலிலே இன்று பூண்டுகளும் கள்ளிகளும்முளைக்க ஆரம்பித்து விட்டன, இவற்றைக் கல்லியெறிவது நின் கடனன்றோ?

நின் கடமையைச் செய்யத்தயங்காதே உலகின்கண்ணுள்ள ஒவ்வொரு நாட்டையும் உற்றுப்பார். மூன்றரைக்கோடி மக்களால்பேசப்படும் ஆங்கிலம் இன்று அவனியை ஆளுகின்றது வங்கமொழியின்றுவளம் பெற்றுவிட்டது. மலையாள மொழியின்று மலைமிசை யொலிக்கிறது, கன்னட மொழியின்று காற்றன்ன உலவுகிறது. தெலுங்கு மொழியின்று தலைத்தூக்கி நிற்கிறது. அந்நாட்டினர் தளரா அன்புடனிருக்க உனக்கு மட்டும் இல்லைத்தன் மொழி வளர்க்க வேண்டுமென்றதாகம். உனக்கு என்று தணியுமிந்த அன்னிய மொழியின்மேல் கொண்ட மோகம்.

நீ பிறந்தநாடு-நீவளர்ந்தநாடு-நீவாழும் நாடு-நீ வாழப்போகும்நாடு புலிநிகர் தமிழ் வேந்தர் வாழ்ந்தநாடுயென்பதை மறவாதே. "பகைவரைப் பொருவேன் இல்லையேல் மலைமீதேறி வீழ்ந்தாயினும் இறப்பேன்" என்ற பண்டைத் தமிழரின் வீரத்தை மறவாதே. "நகுதக்கனரேநாடுமீக் கூறுநர்—இளையனிவனெனவுளையக் கூறிப்—படுமணியிரட்டும் பாவடிபணைத்தாள்—நெடுநல்யானையும் தேருமாவும்—படையமைமறவரும் உடையம்யாமென்று-உறுதுப்பஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்—சிறுசொற்சொல்லிய சினங்கெழுவேந்தரை—அருஞ் சமஞ்சிதையத் தாக்கிமுரசமொடு—ஒருங்கப்படேஎன் ஆயிற்பொருந்திய-என்நிழல் வாழ்நர்சென்னிழல்காணாது.-கொடியனெம் இறையெனக் கண்ணீர்பரப்பிக்-குடிபழிதூற்றுங்கோலேஆகுக- ஓங்கிய சிறப்பின் உயர்கேள்வி- மாங்குடிமருதன் தலைவனாக—உலகமொடு நிலைஇயபலர் புகழ் சிறப்பிற், புலவர்பாடாதவரைகவென்னிலவரைப், புரப்போர்புன்கண்கூர, இரப்போர்க்கியா இன்மையானுறவே" என்று வஞ்சினங்கூறிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் வீரத்தைமறவாதே. பசியும் பிணியுமின்றி வசியும் வளனும்சுரந்த வளநாடு இந்நாடுயென்பதைமறவாதே.

புத்தம்புதிய கலைகள் நித்தம் வளர்கின்றதாம் மேலைநாட்டிலே, அந்த மேன்மைக் கலைகள்யெமதுமொழியில் இல்லையேதோழா! கலைச்செல்வங்கள்யாவும் கொணர்ந்திங்குசேர்த்திடுவீர். இசைத்தமிழைஎற்றமுறச்செய்ய இடிமுழக்கம்செய்திடுவீர். நாடகக்கலையை ஞாலம்கண்டுவியக்க நன்னிலைப்படுத்துவீர்கொட்டுகமுரசுமுத்தமிழ்முழங்க.

---

## திராவிடர் கழகம்,

### சிதம்பரம்.

11—9—44 திங்கள் மாலை இக்கழகத் தலைவர் தோழர், T. பத்மநாப நாயுடு அவர்கள் தலைமையில் செயற்குழுவினர் கூடிச்செய்த தீர்மானங்களாவன:—

1. அண்மையில் வரும் "பெரியார் பிறந்த தினவிழாவை வெளியூர்த் தலைவரொருவரை வருவித்து நடத்துவது.

2. அன்றே திராவிடர் படிப்பகம் (வாசகசாலை) திறப்புவிழா ஆற்றுவது

3. சிதம்பரத்தில் 7–10–44-லிருந்து 5நாள் நடைபெறப்போவதாய் இருக்கும் அகில இந்திய வர்ணாச்சிரம மாநாட்டிற்குத் திராவிடரின் மாறுபட்ட கருத்தை அறிவித்துக்கொள்வதற்காக, [தோழர். அண்ணாத்துரை அவர்கள், தோழர் சிற்றரசு அவர்கள் முதலியவர்களைக்கொண்டு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், இதற்காகும் செலவிற்கு உள்ளூரிலும் வெளியூர்களிலும் வசூல்செய்து தொண்டர்களையும் விரிவாய் வரவேற்பதெனவும் திட்டமிடப்பெற்றது.

4. சேலத்தில் முறைப்படி நடைபெற்ற மாகாண மாநாடு குறித்தும் நிறைவேறிய தீர்மானங்கள் குறித்தும் தன் நிறைந்த மகிழ்ச்சியை இக்கழகம் அறிவித்துக்கொண்டு, மாநாடு குறித்துத் தவறுபட்ட கருத்துகளைப் பரப்பும் அறிக்கை வீரர்களான சுயநலக்காரர்கள்மீது தலைவரவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது.

---

## ஆதித்திராவிட சங்கம்

தூத்துக்குடியில் ஆதித்திராவிட மக்களின் நலம் கருதி கடந்த ஒன்றரை வருஷகாலமாக ஆதித்திராவிட மகாஜன சங்கம் ஒன்று நிறுவி அச்சங்கத்தை நிகழ் வருஷம் 18—8—44ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு அதன் அறிகுறியாகத்திராவிடநாடுக்கு ரூபாய் ஒன்று நன்கொடை அனுப்பப்பட்டது.

# திராவிட நாடு.

காஞ்சி 17—9—44 ஞாயிறு


## மூலிகை, மலைமீது.

**பத்திரிகை உலகம் பார்ப்பனரிடமே பெரிதும் இருக்கிறது, இதனால் திராவிடர்களுக்கு மனக்குறைவு ஏற்படுவதும், தமக்கு ஒரு உயர் நிலை தேவை என்ற எண்ணமுண்டாவதும், இந்தத் துறையிலே இருப்பதுபோலவே, மற்றத்துறைகளிலுமிருப்பதால், திராவிட நாடு திராவிடருக்கானால்தான் இந்தக் குறை தீர்க்கப்படமுடியும் என்று எண்ணமுண்டாவதும் இயற்கை. எனவேதான் திராவிடஸ்தான் கோரிக்கை உண்டாகி இருக்கிறது.**

*என்று, காசா சுப்பாராவ் என்றபார்ப்பன ஆசிரியரே சின்னாட்களுக்கு முன்பு, ஒரு பொதுக் கூட்டத்திலே பேசினார். அவர் இதுபோது பத்திரிகை ஆசிரியர் வேலையிலே இருந்து விலகவும் நேரிட்டதாகக் கேள்விப்படுகிறோம். உண்மையை அவர் எடுத்துக்கூறியதற்காக நாம் மிகப் பாராட்டுகிறோம்.*

*பத்திரிகைகள், ஆரியரிடம் சிக்கிக் கொண்டிருப்பதனால், நேரிட்டுள்ள கேடுகள் கொஞ்சமல்ல! உண்மை உருக்குலைக்கப்பட்டு, நேர்மை கெட்டு, நச்சுநினைப்புகளும் நாசகால நிந்தனைகளும் கிளம்பி, ஒற்றுமை குலைந்து, வேற்றுமைமிகுந்து போயிருப்பதற்குள்ள முக்கியமான காரணம், ஆரியரின் ஆதிக்கத்திலேஉள்ள ஏடுகள், கட்டுப்பாட்டாகவும், சாதாரண, மிகச் சாதாரண மரியாதையை மறந்தும், திராவிடரின் நிலைக்கு ஊறுதேடும் காரியத்தையே செய்யக் கங்கணம்கட்டிக்கொண்டிருப்பதுதான். "போர்க்கருவி எம்மிடம் இருக்கும்போது, நாங்கள் அவைகளை உபயோகியாமல் இருப்போமா?" என்று ஆரியர் ஆணவத்தோடு கேட்கவுங்கூடும். இந்த ஆணவத்தால், திராவிடர் பல இன்னல்களை அடைகின்றனர், நல்ல பிரச்னைகள் நலிகின்றன, பொய்ம்மைக்குப்பீடமும், உண்மைக்குக் கல்லறையும் கிடைக்கிறது. என்றபோதிலும், இதனால் திராவிடருக்கு உண்டாகும் கேடுகளைவிட, ஆரியருக்கே கேடு அதிகம் என்றுநாம் அறிந்து கூறுகிறோம். மாற்றார் என்று திராவிடரைக் கருதிக் கொண்டு, அவர்கள் வெட்டும் படுகுழி ஆழமானது, பயங்கரமானது வீழ்வோரை மாய்க்கக்கூடியது, ஆனால் அந்த ஆழக்குழியை அவர்கள் அதிக கஷ்டப்பட்டு வெட்டி வெட்டி, ஓயாது வேலை செய்து, மெலிந்து, களைத்து, அதன் ஓரத்திலே ஓய்வுக்காக உட்காரும்சமயம், அப்படுகுழியிலே வீழ்வதற்காக, விரட்டப்பட்டு வரும் திராவிடத் தோழர்கள் கிளப்பும் கால்தூசு புயலெனக்கிளம்பி, படுகுழி வெட்டியவர்களைக் குழியிலே விழச்செய்து விடும்! இதனைஉணராவில்லை, ஏடுமூலம் நாடு கெடும் தீயசெயலைச் செய்யும் திருப்பிரமங்கள். இன்று திராவிடர், ஆரியர் போராட்டம், இந்த அளவுக்குவந்திருப்பதற்குக்காரணமே, பத்திரிகை உலகிலிருந்துகொண்டு ஆரியர்கள் வளர்த்த துவேஷந்தான்.*

*முஸ்லீம்கள் விஷயத்திலே, பத்திரிகைகள் இவ்விதம் நடந்துகொண்டதன் விளைவு, காந்தியாரை, ஜின்னாமாளிகைக்குச்சென்று பேசச்செய்திருக்கிறது, அந்தப்பேச்சு வெற்றி பெறவேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டிய நிலைமைக்கு, "நாட்டின் நாயகர் நாங்களே" என்று நவின்றவர்களைக்கொண்டு வந்துவிட்டது, எழுதுகோலுக்கும் அறிவுக்கும் பொருத்தமேற்படுத்திக் கொண்டால், இந்த ஆரியர்கள், முஸ்லீம்கள் விஷயமாக நடந்துகொண்டதன் விளைவை உணர்ந்து இனியேனும், திராவிடர் சம்பந்தப்பட்ட விஷயத்தில் சரியாக நடக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பெறலாம். இல்லை, எமது இயல்பை மாற்றிக்கொள்ள மாட்டோம் என்றே அவர்கள் கூறுவரேல், கேடுவருமுன் மதி கெட்டுத்தானே வீடும் என்று நாம்இருப்போம், நாளை நடப்பதை யாரறிவார்! என்று தெரியும் நமக்கு, இன்று திராவிடன் என்ற உணர்ச்சி பெற்றவர்கள், ஆரிய ஆதிக்கத்திலிருக்கும்ஏடுகளை, நாட்டின் களைகள் என்று கருதுகிறார்கள். அவர்களின் தொகை குறைவாக இருக்கலாம். குறைமதியினர்நிறைய இருக்கலாம் இந்தக் குணங்கெட்டவர்களின் குறுநகையில் சொக்கி, ஆரிய ஏடுகளை வேதமென நம்பிக்கொண்டு! வேதத்தையே பேதமெனும் பித்தத்தை வளர்த்த ஓலைஎன்று கருதும் கூட்டம் இருக்கிறது இந்நாளில். அவர்கள் இந்த ஆரிய ஏடுகளை, வீரியமுடையோரைக் கெடுக்க, குலுக்கி மினுக்கி, கடை இடை காட்டி, காமத்தீமூட்டி, கண்ணியத்தை ஓட்டி, அறிவைக் கருக்கி, ஆண்மையைச் சுருக்கி, பாசமெனும் படுகுழியில் வீழ்த்திடும்,நாசகால நாரி எனவே மதிக்கின்றனர். இங்ஙனம் கருதுவோரின் தொகை மிகக் குறைவாக இருக்கலாம். ஆனால் அந்தத் தொகை வளர்ந்துகொண்டு வருகிறது, அதனை உணராதார், அறிவை இழந்தார் என்போம்,*

*சேலத்திலே கூடிய ஜஸ்டிஸ் மாநாட்டிலே, செவ்விள நீர்பருகச் சென்ற மந்தியைச் செந்தேள் தீண்டினால், அது எங்ஙனம், தக தகவென ஆடி,த்தாவித் தவிக்குமோ அது போலப் பெரியாரை வீழ்த்த வலை வீசி, அவ்வலையிலே தாமே வீழ்ந்து, பின்னர் அடைக்கலப்பத்தும், அபயஅகவலும், துதிமாலையும் பாடி, தப்பினரோ, அவர்களின், தப்புரைகளை, இன்று, ஆரிய ஏடுகள், தாராளமாக எடுத்து எழுதுகின்றன. திராவிடரிடையே "பிளவு" என்று கூறிப்பூரிப்பதும், பெரியாருக்கு "எதிர்ப்பு" என்று எழுதுவதும், பெரியார் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து ஓடிவிட்டார் என்று உளறுவதும், இன்று அவர்களுக்கு, இனிப்பாக இருக்கிறது. இத்தச்சமயத்திலாவது இந்த ஏடுகளுக்கு அறிவுத் தெளிவும், நீதியில்நாட்டமும் ஏற்பட்டிருக்கலாகாதா என்பதே நமது கவலை.*

*பட்டம்பதவிகூடாது, என்று தீர்மானித்து, அதன் பலனாகப், பல பங்களாக்களின் பகையை வரவேற்றுக்கொண்டிருக்கிறது கட்சி. தேர்தலுக்குத் தம்பட்டம்தயாரிக்கும் இடமாகக்கருதப்பட்ட இடம், திராவிடநாட்டு விடுதலைக்குப் பாசறையாக்கப்பட்டிருக்கிறது. ஆரிய ஏடுகளுக்குப் பட்டம்பதவியிலே வெறுப்பும், அரசியல் சூதாடிகளிடத்திலே அருவருப்பும்இருப்பது உண்மையானால், எந்தக்கட்சியை அதே ஏடுகள் பட்டம் பதவிக்காகவேஉள்ள கட்சி என்று கண்டித்தனவோ, அதே கட்சியிலே பட்டம்பதவி கூடாது என்று தீர்மானம்செய்திருப்பதை, வரவேற்றுப் பாராட்டியிருக்க வேண்டாமா, நீதியிலே நினைப்புஇருந்தால். நீதிவேண்டாம், அதைமறந்து நெடுங்காலமாகிவிட்டிருக்கக்கூடும், யூகமாவது இருக்கவேண்டாமா? பட்டம் பதவிகளை விட்டுவிடவேண்டுமென்று கூறும் கூட்டத்தை ஆதரித்துஎழுதி, அதன்மூலம், நாட்டைஆளுவோருக்கு, அவர்கள்மீது, ஜஸ்டிஸ்கட்சிக்கும் விருப்பம்இல்லை, என்பதை எடுத்துக்காட்ட வேண்டாமா? நாட்டிலே பிளவுகூடாது என்று பெருங்குரலிலேபேசும் இவர்கள், ஒருகட்சியின் நினைப்பிலும் நிலையிலும்ஒரு பெரியமாறுதல்நேரிடுகிற இந்தச் சமயத்திலே, பட்டம்பதவிக்குப் பல்லிளிக்கும் ஒரு சிறுகும்பலையா ஆதரிப்பது! இது நேர்மையா, அறிவுடைமையா, யூகத்தின் பாற்பட்டதா! இல்லை! ஆணவத்தால் விளையும் அறிவீனம் என்போம். ஒரு ஏடு, பெரியாருக்கு இந்தத் தள்ளாதவயதிலாவது இந்த ஞானோதயம்வந்ததே அதுவரையிலே சந்தோஷம் என்றுஎழுதியிருக்கிறது. பெரியாருக்கு "ஞானோதயம்" இந்த ஆரியக்கும்பலைவிட்டு வெளிஏறவேண்டுமென்று என்று நினைத்தாரே அன்றேஏற்பட்டது. குருகுலப்போராட்டகாலத்திலேயே அவருக்கு 'ஞானோதயம்'ஏற்பட்டது.இன்றுஏற்பட்டதாகஎழுதும்"பாரததேவி"என்ற ஏடு, அதுபோது கருவிலேகூடஇல்லை, அதன் தாய்க்குத் திருமணப்பருவம்கூட இல்லாதபோதே பெரியார், உண்மையைஅறிந்து,ஊருக்கு உரைக்கஆரம்பித்து, தள்ளாதவயதிலே*

தன்னைச்சுற்றித் திராவிடர் பெருங்கூட்டமாகநின்று, 'எமது தலைவர் பெரியாரே!' என்று, ஏத்தி ஏத்தித்தொழும் காட்சியைக்காண்கிறார்! இது பாரததேவியின் கண்களுக்குத்தெரியக் காரணம் இல்லை! எப்படி இருக்கும், "அன்னையே, பாரத தேவியே! உன்னை வெட்டுவதற்குச் சிலர் முனைகிறார்கள். நான் அதனைத்தடுப்பேன்" என்று உறுதிகூறித்தன்முன்னே உடைவாளோடுநின்று காவல்புரிந்த காந்தியாரும் ஆச்சாரியாரும், பாரத மாதாவை வெட்டுவது, மயக்கமருந்து (குளோரோபாரம்) கொடுத்தா, கொடுக்காமலா? குறுக்குவாட்டிலா, நீளவாட்டிலா, என்று விவரம் விசாரிக்க, ஆருடம் சகுனம்பார்த்து, ஆசிகேட்டுப்பெற்றுச்சென்றிருப்பதைக்கண்டு, கண்ணீர் கலங்கிஇருக்கிற பாரததேவிக்குப், பெரியாரின் உயர்நிலைதெரியாதிருக்கலாம், நமக்கு அதுபற்றிக் கவலையில்லை. ஆரியஏடுகள், தமது, விஷமத்தனமானசெயலால், திராவிடருக்கு மனப்புண்உண்டாகும்படிசெய்கின்றன. அந்தப் புண்தீரும் மூலிகை, விந்தியமலை உச்சியிலே இருப்பதை நாம்அறிவோம். அந்த மலையையே எல்லையாகவும் அரணாகவும்கொண்ட "திராவிடநாடு" அமையத், திராவிடப் பெருங்குடிமக்கள், தளராது உழைக்கத் தொடங்கிவிட்டனர். ஆரியம் அஸ்தமித்துத் திராவிடம் உதயமாகும் காலம்இது. குருடனுக்குக் கதிரவனின் இளங்கதிர் தெரியாது, செவிடனுக்குச் சேவல்கூவுவதும்கேட்காது, திராவிடரின் எழுச்சியை அகந்தைகொண்ட ஆரியர் அறியார், அறிவுள்ளோர் அறிவர்.

——

இராசிபுரம் & நாமக்கல்

தாலுகா,

## விவசாயிகள் மாநாடு.

28—9—44 வியாழக்கிழமை

காலை 8-மணிக்கு

இராசிபுரம்

ஓரியண்டல் தியேட்டரில்

நடைபெறும்.

மாநாட்டுத் தலைவர் மாஜிமந்திரிகனம்

R. M. பாலாட், M. A;

பார்-அட்-லா M. L. C. அவர்கள்.

மாநாட்டுத் திறப்பாளர்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்,

மாநாட்டுக் கொடியேற்றுபவர்,

பழயகோட்டை

இளையகுமார பட்டக்காரர் தோழர்

N. அர்ச்சுனன் அர்வர்கள்.

### திருமணம்.

திருக்காட்டுப்பள்ளி, நவீன் டாகீஸ் தியேட்டரில், 10—9—44 ஞாயிறு மாலையில், செங்கரையூர் தோழர் பொன்னனூர் களத்தில்வென்றார் அவர்களின் தலைமையில, மாஜி காங்கிரஸ்வாதியும், தன்மதிப்பியக்கத் தோழருமான எஸ். கந்தசாமி நாட்டாரவர்களுக்கும், (தென்னங்குடி) இளங்காடு தோழியர் M. அரங்கநாயகிஅம்மாளுக்கும். சீர்திருத்தத் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது. மேற்படி திருமண ஞாபகமாகத்திராவிட நாடு பத்திரிகைக்கு ரூ 1. நன்கொடை. தரப்பட்டது.

——

## கிந்தனார்.

பொள்ளாச்சி, பகுத்தறிவுவாசகசாலையின் உதவிநிதிக்காக தோழர் N. S. கிருஷ்ணன் அவர்களால் கிந்தனார்காலட்சேபம் 21—9—44ல் நடைபெறும்.

### கலப்புத் திருமணம்.

சிதம்பரம் காத்தாபிள்ளைத்தெரு,மணமகள் இல்லத்தில் 12—8—44 காலை 5½ மணிக்கு மாயவரம் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர். தோழர் த. சி. விருத்தகாசி அவர்களும், தோழனார் ஆசிரியை திருவாட்டி சாரதாம்பாளும், தில்லை தமிழ்புலவர் தோழர் நா. மு. மாணிக்கம் அவர்கள் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். தன்மதிப்பியக்கத் தோழர்கள் பலர்வந்து குழுமியிருந்தோடு. அந்தத் திருமணத்தின் திருத்தமுறைகளை ஆதரித்துப்புலவர் தோழர்முருகேசனார் அவர்களும், திராவிட கழகச்செயலாளர் திருமணவழகனாரும், கல்லூரிமாணவர்களும் சொற்பொழிவு ஆற்றினர்.

திருமண நன்கொடையாக குடியரசு, திராவிடநாட்டுக்கு ஒவ்வொரு ரூபாயும், திராவிடர் கழகத்துக்கு மூன்று ரூபாயும் வழங்கினார்கள்.

——

### திருமணம்.

(4—9—44) திங்கட்கிழமை காலை 9 மணிகரு மணச்சநல்லூர் தோழர் முனியப்பனுக்கும் மதுரை ஜில்லா உத்தமபாளையம் தோழியர் மாணிக்கம் நங்கைக்கும் திருமணம் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்களும் மற்றும்பல அறிஞர்களும் "திருமணம்"பற்றிச்சொற்பொழிவுநிகழ்த்தினார்கள்.

இத்திருமண நினைவாகத் "திராவிட நாடு" வளர்ச்சிக்காக ரூபா 3. நன்கொடைதரப்பட்டது.

### சீர்திருத்தத் திருமணம்.

4—9—44ல் நாகப்பட்டணம், வடக்குத் துரோபதை அம்மன் கோயில் தெருவில் தோழர் பெ. ஆண்டித்தேவர் அவர்கள் புதல்வன் தோழர் அய்யாவு அவர்கட்கும், தோழியர் கருத்தாள் அவர்கட்கும், தோழர் S. P. செட்டியார் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் விமரிசையாய் நடைபெற்றது. மேற்படி திருமணத்தை முன்னிட்டு, குடி அரசு, திராவிடநாடு, பத்திரிகைகளுக்கு முறையே ரூ. 1. நன்கொடைதரப்பட்டது.

——

### திருமணம்.

கல்லை கிராமத்தில் தோழர் கே. பி. பாவாடைராயருக்கும், காரை கிராமம், தோழியர் சக்குபாய் அம்மைக்கும், மணமகன் இல்லத்தில் புரோகிதப்புரட்டுகளொழிந்த சீர்திருத்தத்திருமணம் சிக்கன முறையில் செவ்வனே நடைபெற்றது. டை திருமணத்தை முன்னிட்டு "திராவிடநாடு" வளர்ச்சிக்காக ரூபா 2. நன்கொடைதரப்பட்டது.

பவுன் நிறமுள்ள

## கிளி மார்க்

## பட்டணம் பொடி

ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீக்காது ஞாபகம்.

கிடைக்குமிடம்:—

ஏ எஸ். ராஜன் கம்பெனி,

9-வெங்கடாசல நாய்க்கன் தெரு,

பழய வண்ணாரப்பேட்டை, சென்னை.

## மணமகன் தேவை.

நல்ல தமிழ்ப்படிப்பும், சிவப்பு நிறமும் சுமார் 4¾அடி உயரமும், சொற்பொழிவாற்றும் திறனும், உடற்பயிற்சியில் ஓரளவு தேர்ச்சியும், தன்மதிப்புணர்ச்சியும், 16வயதும் நிரம்பப்பெற்ற ஓர் மணமகளுக்கு மணமகன் தேவை.

மணமகன் 25-வயதுக்கு மேற்படாதவராகவும், மாதம் ரூ. 50க்குக் குறையாத நிரந்தர வருவாயுள்ளவராகவும், தன்மதிப்பு இயக்கத்தைச் சேர்ந்தவராகவும், உயரத்திலும், படிப்பிலும் சற்றுக்கூடுதல் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். கடிதப்போக்கு வரத்துகள் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்.

தமிழன் C/o,

K. K. நீலமேகம்,

கருட்டுக்கப்பெனி,

தம்பிக்கோட்டை.

# சந்தேகமில்லை.

9-ம் பக்கத்தொடர்ச்சி·

மனோஹரான், இசை, பிறகு விருந்தாக இராமல் வேறு எப்படிஇருக்கமுடியும்?

மனோஹரனாக K. R. இராமசாமியை இரும்புச் சங்கிலியாற்பிணைத்து இழுத்துக்கொண்டு வருகிறபோது, அவருடைய நடிப்பையும், மற்றப்பகுதிகளிலே அவருடைய இசையையும், கண்டும்கேட்டும் களித்தநான், ஒன்று எண்ணினேன், என் நண்பர் இராமசாமி, இந்த இசைத் திறனையும் நடிப்புத்திறனையும், வளமாக வைத்துக்கொண்டால், விரைவிலே, பொற்சங்கிலியால் அவரைப்பிணைத்து இழுத்துக்கொண்டுவந்து நிறுத்துவார்கள் ரசிகர்கள். நண்பர் இராமசாமிக்கு, நல்லசாரீரம், இசைத்திறன்இனிமைஇருக்கிறது.என்போல்அவரோடுபழகியவர்களுக்குத்தெரியும் அவருடைய குணமும்மணமுடையதே, மேலும் அவர் நகைச்சுவை அரசரின் மேற்பார்வையிலே இருக்கிறார், வளர்ச்சிக்கு வேறு உறுதிமொழி தேவையில்லை. மனோஹரனின் நண்பன் இராஜப்பிரியனாக நடிக்கிறார், தமிழரின் பிரியத்தைத் தட்டிப்பறித்த தோழர் D. V. நாராயணசாமி. தெளிவான உச்சரிப்பு, நேர்த்தியான நடிப்பு, நடிகஉலகுக்குகந்த ஒளிவிடுகண்கள், புன்னகைதவழும்முகம் திட்டமானஉடலமைப்பு, தொழிலிலே அக்கரை, தோழர்களிடம்பாசம், படிப்பிலே பிரியம், பண்பிலே பயிற்சி, இவ்வளவுடன், இன்று D. V. நாராயணசாமி, N. S. K. கலாசாலையிலே ஓர் மாணவனாகச்சேர்ந்துவிட்டார். அவருடையநடிப்பைநாடு மேலும் மேலும் கண்டுகளிக்கும்காலம் விரைவிலேஉளது. புருஷோத்தமனாக நடிக்கிறார், D. பாலசுப்பிரமணியம். மன்னர்கள், கெம்பீரமாக இருப்பார்கள் என்று கதைபடிக்கிறோம், நமது கண்முன்உள்ள பல மன்னர்களிடம் அதனைக்காணமுடிவதில்லை, D.பாலசுப்பிரமணியம் அவர்கள், மன்னனாக நடிக்கும்போது, நிஜராஜாக்கள்கண்டால் அடடா, நமக்கு இந்தஆசாமிபாடம் கற்றுக் கொடுத்தால் நன்றாக இருக்குமே என்று யோசிப்பார்கள், அத்தனை அழகாக எடுத்துக்கொண்ட பாத்திரத்தின் இயல்பையும், கதையின் போக்கையும், உணர்ந்து நடிக்கிறார். தோழர் K. T. சந்தானம் சத்தியசீலர் வேடத்திலே, சாந்தசீலராக நடித்துப் புன்னகை தவழும் முகத்தைக்காட்டி, பொறுப்பும் அன்பும் செறிந்த மந்திரி எப்படி இருப்பார் என்பதைக்காட்டுகிறார். வசந்தசேனையின் நடிப்பும் நேர்த்தியே! விஜயாளாக நடிக்கும் சிறுமியின், நாதமும் நடிப்பும், சுவையுடையதாக இருக்கிறது.மகிழ்வால் மான்குட்டிபோல் துள்ளியும், சோகத்தால் துவண்டதாமரை போலாகியும், நடிக்கும்போது, இப்படிப் பட்ட, ''விஜயாளை'' கொடுமையும்செய்கிறாளே என்று கோபம் வரும்! பாடல்கள் புதிய மெட்டிலே உள்ளன, கேட்கஇனிக்கும் விதமாக அமைந்துள்ளன. பத்மாவதியாக நடித்துப் பதியிடம் பரிவும் மகனிடம் மட்டற்ற அன்பும், பொறுமையும் விளங்க நடிக்கிறார் கிருஷ்ணமூர்த்தி. மயில் நடனமும், வசந்தத்திருவிழாவும், நேர்த்தியாகஅமைக்கப்பட்டுள்ளன. நான் அதிகம்கூறுவானேன், நீங்களேபோய், போர்த்து ரசித்துவிட்டுத்தான் வரப்போகிறீர்கள், ''மனோஹரா''வை.

மங்களபாலகான சபையின் மறுமலர்ச்சியிலே, இதுமனோரஞ்சிதமாக இருக்கிறது. ''போய்ப்பாருங்கள், நேர்த்தியான நாடகமேஇது சந்தேகமில்லை என்று பாடிக்கொண்டு வருவீர்கள். சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நடக்கிறது, ''மனோஹரா.''


தந்தி:—''புறமார்க்'' திருச்சி.





கரூர் தாலூகா,

## முதலாவது திராவிட மாநாடு.

24—9—44 ஞாயிற்றுக்கிழமை, கரூர் அம்பிகை டாகிசில் நடைபெறும்.

தலைவர்;—

C. N. அண்ணாத்துரை M. A:

திறப்பாளர்:—

N. அர்ச்சுனன் அவர்கள்,

கொடியேற்றுபவர்:—

நெடுஞ்செழியன்.

திராவிடநாட்டுப்படம்:—

பெரியார்.

அன்பர்கள் திரண்டு வருக!

வரவேற்புக் கழகத்தார்.

# இளங்கோ மன்றம்,

## தில்லை.

இந்தமன்றத்தின்5வதுஆண்டுத்துவக்க விழா 31—8—44 மாலை சிதம்பரம் பச்சையப்பா உயர்நிலைப்பள்ளி மன்றத்தில் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தமிழ் விரிவுரையாளர் டாக்டர் அ. சிதம்பரனாதஞ் செட்டியாரவர்கள் M. A. தலைமையில் மன்றத்தலைவர் தோழர் நா. மு. மாணிக்கம்அவர்கள் முன்னுரையுடனும், ''தமிழ் இளைஞர்'' என்ற தலைப்பில்மாணவர்கள் மதம்-சமூகம் கலை என்பவைகளால் வேற்றுமைப்படாது ஒத்துவாழ, உயர்ந்த புரட்சிகரமானசீர்திருத்தத்துறைகள் மலிந்ததன்மதிப்பு இயக்கம் காட்டும் நியாயங்களால் இராமாயணம், பெரிய புராணங்களின் சில பகுதிகள் வெறுக்கப்படுவதை எடுத்துக்காட்டி, பூவாளூர் தோழர், அ. பொன்னம்பலனார்விரிவுரை நிகழ்த்தினார். முடிவுரையில் தலைவரவர்கள்காலவரலாறு அதைவிளக்குவதாகவும், அக்காலத்திய புலவர்கள்ஆரியத்துக்குஎப்படி ஆதிக்கம் காட்டினர் என்பதைக் காட்டவாவது அவைசில நிலவ வேண்டுந்தான் என்றும் பேசப்பின் 10-30க்கு நன்றிகூறலுடன் விழா இனிது முடிந்தது.

## இராசிபுரம்.

# திராவிடர் கழகம்.

30—8—44ல் இராசிபுரம் ''பெரியார் மாளிகையில்'' நமது இயக்கத் தோழர்கள் அனைவரும், தோழர் P, A. சித்தப்பா அவர்கள் தலைமையில் கூடிக கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

1. 27—8—44ல் சேலத்தில் கூடிய தெ. இ. ந. உ. சங்க மாகாண மாநாட்டில் எல்லாத்தெ. இ. ந. உ. சங்கப்பெயர்களையும் , ''திராவிடர் கழகம்'' எனப் பெயரிடத் தீர்மானிக்கப்பட்டபடி, இராசிபுரம் தெ. இ. ந. உ. சங்கத்தையும் இராசிபுரம் ''திராவிடர் கழகம்'' என மாற்றியமைக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. இராசிபுரத்தில் தற்போது இருந்து வரும் நம் இயக்க சங்கங்களனைத்தையும் ஒன்றாக இணைத்து, இராசிபுரம் திராவிடர் கழகம் என்ற ஒரே சங்கத்தின் பெயரால் இயங்கவேண்டுமாகத் தீர்மானிக்கப்பட்டது.

## பிறப்பு.

10—10—43ல் மதுரை தெ. இ. ந. உ. சங்கத்தில், திராவிடர் தொண்டர் படையின் ஆதரவில் விதவாவிவாகம் செய்துகொண்ட அருப்புக்கோட்டை, சண்முகவேலுவின் துணைவி, லட்சுமியம்மாள் 3—9—44ல் ஆண்மகவைப் பெற்றதைக் குறித்து 'குடிஅரசுக்கு' ரூ. 2ம், 'திராவிடநாடு'க்கு ரூ. 1ம் நன்கொடை அளித்துள்ளார்கள்.

# சந்தேகமில்லை! சந்தேகமில்லை!!

00000000(பாரதன்)000000000000000000000000000000தb000000000

“தன்னானத்தானா, தன்னானத்தானா,

தன்னானத்தானா, தன்னானத்தானா”

என்ன பாரதா, தன்னானாவிலே ஆரம்பிக்கிறாய் என்று கேட்கிறீர்களா? நான் கேட்டபாட்டை நீங்களும் கேட்டிருந்தால், என்னைப்போலத்தான் அந்தமெட்டையும், அதிலே அமைக்கப்பட்டுள்ள பாட்டையும், பாடிக்கொண்டிருப்பீர்கள் கேளுங்கள் பாட்டை. மேலே இருக்கும் மெட்டிலே பொருத்திப்பாடியும் பாருங்கள்.

“சந்தேகமில்லை.........
......சந்தேகமில்லை.

எதற்கும் என்றும் எள்ளளவேனும்

சந்தேகமில்லை.........
......சந்தேகமில்லை.

காக்கா, கருப்பு—சந்தேகமில்லை,

கடல்நீர் உப்பு—சந்தேகமில்லை.

ஆண்பிள்ளைக்கு மீசைமுளைக்கும்
—சந்தேகமில்லை.

அதுகிடையாது பொம்பிள்ளைக்கு
—சந்தேகமில்லை.

சந்தேகமில்லை, சந்தேகமில்லை,

அப்பன்கூடப் பிறந்தவள் அத்தை
—சந்தேகமில்லை.

அத்தைக்குமீசை முளைத்தால் சித்தப்பா
—சந்தேகமில்லை.

என்ன இது, பைத்யக்காரத்தனமான பாட்டாக இருக்கே, காக்கா கருப்பாக இருப்பதும், கடல்நீர் உப்பாக இருப்பதும், அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா என்பதும், யாருக்குத்தெரியாது? இதிலே சந்தேகம் இல்லை என்று கூறுவானேன்? இது என்ன பைத்யக்காரத்தனமான பாட்டு. இந்தப் பைத்யக்காரத்தனமான பாட்டுக்குநீ பக்கமேளம் வாசிக்கிறாயே, என்ன விஷயம்? என்று கேட்கத்தான் தோன்றும் உங்களுக்கு.

பைத்யக்காரத்தனமான பாட்டாகத் தோன்றுகிறதல்லவா அந்தப் பாட்டு. சரி, தோழர்களே, அது பைத்யக்காரன் பாடுவதற்காகவே கட்டப்பட்ட பாட்டு, அதிலே இருக்கும் பொருத்தமிருக்கிறதே, அதனைக்கண்டு பாராட்டியேநான் அப்பாட்டைத் தீட்டினேன். பைத்யக்காரன் என்னபாடுவான் என்பதை யூகித்து, அழகாக அமைத்திருக்கிறார், இதுபோல, அந்த ஒட்டிஉலர்ந்துபோய்க் காற்றடித்தால்கீழே விழுந்துவிடும்படியான உருவமைந்த, உடுமலை நாராயண கவி.

வசந்தன்—பைத்யக்காரன். அரண்மனையைத்தனது சாகசத்தால் ஆட்டிப் படைக்கும் வசந்தசேனையின் மகன். பைத்யக்காரன், பாடுகிறான் இப்பாட்டை, பக்கத்திலே விகடன் நின்று பாடுகிறான் கூட. பாட்டைக்கேட்டுச்சிரித்ததால் அன்று ஏற்பட்ட பக்கவாட்டுவலி இன்னும் குறையவில்லை.

விழுந்துசிரித்தால் வயிற்றுவலிக்கும்
சந்தேகமில்லை.

உங்களுக்கும் அதுதான்நேரும்
சந்தேகமில்லை.

என்று எனக்குக்கூடப்பாடலாமாஎன்று தோன்றுகிறது.

பாட்டும் மெட்டும் இருக்கட்டும், உடுமலையின் கவிதையை, உணர்ச்சியோடு பாடி மகிழ்வித்ததுயார், உனக்குத்தான் நகைச்சுவைக்கு N. S. K. தான் மாடலாயிற்றே, இதுயார் பாடினது என்று கேட்கிறீர்களா? N. S. K. பாடாவிட்டாலும், அவருடைய கோஷ்டிபாடியது.

“யார்,கோஷ்டி?கிருஷ்ணமூர்த்தியா? புளிமூட்டையா? செல்லமுத்துவா?”

இல்லை, அது அவருடைய சினிமா, கிந்தனார், கோஷ்டி. நான் மேலே தீட்டியது, அவருடைய நாடகக்கோஷ்டியின் நகைச்சுவைப்பாட்டு. உங்களுக்குத்தான் தெரியுமே, நண்பர் N. S. கிருஷ்ணன் இப்போது மங்களபாலகான சபையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அதிலேதான், இப்பாட்டு. நடிகர்கள் P. D. சம்பந்தம் (வசந்தன்) மாதவன் (விகடன்) எனும் இருவரும் சேர்ந்துபாடி, கொட்டகையிலே சிரிப்பைஅள்ளிஅள்ளி வீசிவிடுகிறார்கள்.

“மனோஹரா” நாடகம் நடக்கிறது 9ம் தேதியிலிருந்து. அதிலேவரும் நகைச்சுவைபகுதிஒன்றே, பலநாட்கள்சென்னை கண்டு கண்டு களித்து, நண்பர்களை அழைத்துக்கொண்டு சென்று சென்று விருந்துண்டுவரும் விதமாக இருக்கிறது. அவ்வளவுதானா, வேறே இல்லையா? பேஷ். நகைச்சுவையுடன் இசைச்சுவை போட்டியிடுகிறது. அதைப்போட்டிக்கு இழுத்துவிடுகிறது நடிப்பு. இவ்வளவையும் நான் மிஞ்சிவிடுவேன் என்று மிரட்டுகிறது, ஓவியக்காரர் மாதவன் அவர்கள், மங்களபாலகான சபையாருக்குத் தனித்திறமையுடன் தயாரித்தளிக்கும் காட்சி ஜோடினைகள். கண்கவர் உடைகள். இசைவிருந்து, இனிமை, புதுமை இரண்டும் கலந்தது. இவை அவ்வளவையும் உடன் இருந்து கவனித்து, உருவாக்கிக் கண்டுகளித்துவிட்டுப் பிறகே தமதுசினிமாக்காரியத்தைக்கவனிக்கலானார் நகைச்சுவை அரசர்.

இசைவிருந்து என்று கூறினேன் அது பொருத்தமான வாசகமா என்று கேட்பீர்கள். M. S. B. S. சபையிலே பல வருஷங்களாக நடித்துப் புகழ்பெற்று, இப்போது “பூம்பாவை” என்ற படத்திலே நடித்து ரசிகர்களைப் பூரிக்கச் செய்த, நண்பர் K. R. இராமசாமிதான்

( 8-ம்பக்கம் பார்க்க )

---

## பார்வதி பி. ஏ;

10-ம் பக்கத்தொடர்ச்சி.

இதைவிட மரணம் மேல் என்று பார்வதி எண்ணினாள், கூவினாள் அவனைக் கும்பிட்டாள், இங்குமங்கும் ஓடினாள்.

“வாடி முட்டாளே, சோமாகுது வா, ஆசையாக எனக்கொரு முத்தம்கொடு, அதிலேநான் சொக்கிப்போனால் ஒரு வேளை நீ உயிர்தப்பினாலும் தப்பலாம்,” என்று காமவெறியன் கூறினான்.

தோட்டத்திற்குச் சென்றிருந்தவர்கள் பார்வதியின் கூக்குரலைக்கேட்டு, “சரி, காரியம்நடக்கிறது,” என்று கருதிக் கொண்டனர்.

“என்னைக்கொன்றுவிடு. உயிர்போகட்டும். என்னை வெட்டிப்போடு” என்று பார்வதி முரடனிடம் சொன்னாள், அவனோ சிரித்துக்கொண்டு, “சாவதற்குப் பயப்படாதவள், சும்மா என்னிடம் கொஞ்சநேரம் சரசமாட ஏன் பயப்படுகிறாய்? வா, நான் என்ன புலியா, சிங்கமா, ஏண்டி, உனக்குமேலே பாசாங்கு காட்டினவளை எல்லாம் நான் பார்த்திருக்கிறேன்.” என்று கூறிக்கொண்டே பார்வதியைப் பிடித்துஇழுத்தான். பார்வதி, அவனிடமிருந்து திமிரிக்கொண்டு, அவனைச் சுவர்ப்பக்கமாகத் தள்ளினாள். போதைமிகுதியால் அவன், கரகரவெனச் சுழன்று, சென்று சுவரிலே பலமாக மோதிக்கொண்டான். அதே சமயம், தெருக்கதவை யாரோ தட்டும்சத்தம் கேட்டது. ஆவேசம்கொண்டவள்போலப் பார்வதி ஓடிச்சென்று, கதவின்தாளைத் தள்ளிக், கதவைத்திறந்தாள், கீழேவீழ்ந்த குடியன்,“ஓடிவிடவாபார்க்கிறாய்”என்று கூவிக்கொண்டே எழுந்து, அவள் தலைமயிரைப்பிடித்து இழுத்தான். வெளிப்பக்கத்திலிருந்து கதவைத்திறந்துவிட்டனர் சிலர். பார்வதி “ஐயோ,” என்று அலறியபடி, வெளியேபாய்ந்தாள்.

“பயப்படாதே குழந்தாய்,” என்று அன்பாகக்கூறிப், பார்வதியைத் தன் மார்பிலே சாய்த்துக்கொண்டுநின்றார் மார்க்கசகாயப்பாதிரியார். (தொடரும்.)

# ஜஸ்டிஸ் ஜானகி.

12-ம் பக்கத்தொடர்ச்சி

"என்னிடம்கூடத்தான் ஆசை"

**"ஆமாப்பா! அவர் எல்லோரையும்என்**னமோ சொக்குப்பொடி போட்டுவிடுகிறார்"

"ஒண்ணுமில்லே. நல்லவேலெசெய்றாரு இராத்திரியும்பகலும், ஊரூரா அலையரூரு. இந்த வயதிலே, பாரேன், நாம்ப சேலம் மாநாடு, முடிந்ததும் இங்கேகூடிகிட்டு பேசறோம், இதுக்குள்ளே எத்தனை ஊர், எத்தனை கூட்டம் நடத்திவிட்டார் பார்த்தாயா? இப்படி வேலெ செய்றவரிடம் ஜனங்களுக்கு அன்புஇருக்கத்தானேசெய்யும்"

"ஆமாம்! அது உண்மைதான்! நம்ம ஆசாமிகளிலே ஒருத்தர்கூடஇல்லேயே, அதிலே ஆயிரத்திலே ஒரு பங்கு வேலெ செய்ய"

"பஸ்ட்கிளாஸ்வேணும், பங்கா வேணும், அரைமணி கால்மணி பேசறதுக்குள்ளே களேப்புவந்துவிடும், கூட்டத்தைக்கண்டாலே குளறும்"

"அதுதான் பெரிய பலவீனம்நமக்கு"

★

"மணி என்னசார்?" இது, கைகடியாரம் உள்ளவரிடத்திலே, அதிக"டிபன்" செய்யாதவர் கேட்டகேள்வி.

"அடடா! கடியாரம் நின்றுபோய்விட்டது" இது கடியாரக்கையரின் பதில். ஜஸ்டிஸ் ஜானகிக்குச் சிரிப்புவந்துவிட்டது, அடக்கிக்கொண்டார்.

1. ஓடாத கடிகாரம் என்று மனக்குறிப்பிலே பதிந்துவிட்டது.

"கொஞ்சம் பவுண்டனைக்கொடுங்கோ ஊருக்கு ஒரு கடிதம் எழுதவேணும்" என்று ஒருவர் கேட்டார், கோட்டிலே பேனாசெருகியவரை.

பேனாவை அவர் கொடுத்தார், எழுதப்போனால், இங்கி இல்லே. "என்ன சார்! இங்கி இல்லேயே" என்றார், இரவல் பேனாக்காரர்.

2. மையில்லாத பேனா என்று மனதிலே குறித்துக்கொண்டார் ஜானகி.

ஓய்ந்துபோன ஒருவர், சாய்வு நாற்காலியிலே படுக்கச் சென்றார், "ஜாக்ரதை! அதிலே ஒருகால் ஊனம்" என்றார் வேறொருவர்.

3. ஒடிந்துகிடக்கும் நாற்காலி என்று ஜானகி மனதிலே பதிந்தது. திரும்பிப் பார்த்தார் ஜமதக்னியைக்காணோம்.

ஓடாத கடியாரம், மையில்லாப்பேனா, ஆள்தாங்கா ஆசனம், பேஷ்! என்று மனதிலே எண்ணினார், மட மட வெனக் கீழே இறங்கினார், கார் ஏறினார். கார் ஓடத்தொடங்கியது. ஜமதக்னி ஓடோடி வந்தார், "என்ன ஜானகி! நான் காப்பி சாப்பிட வந்தேன். வழியிலே கஸ்தூரிபா நிதிக்குப் பணம் திரட்ட ரங்கய்யர் கிளம்பினார். அவரோடே இரண்டொரு இடம் போயிட்டு வந்தேன். உன்காரியம்முடிந்ததோ?" என்று கேட்டார்.

"ஆஹா! முடிந்தது. ஜமதக்னி, உன்னைப் பிறகு பார்க்கிறேன், கொஞ்சம் அவசரம்" என்றார் ஜானகி. கைகடியாரத்தைப் பார்த்தார், வேக வேகமாகக் காரை ரக்கோகலே மண்டபத்தருகே கொண்டுவந்து நிறுத்தினார். உள்ளேஒரே கூட்டம். தாடி அசைய, சால்வைநெகிழ, கேட்போரின் உள்ளமும் உடலும் ஒருங்கே அசையும்படி அந்தக்கிழவர் வீரமுழக்கம் செய்து கொண்டிருந்தார். நேரே, மேடைக்குச் சென்றார், மாலையைப்பெரியார் கழுத்திலே அணிவித்தார், பெரியார் வாழ்க! பெரியார் வாழ்க! என்று ஆவேசம் வந்தவர்போலக்கூவி விட்டு அமர்ந்தார்.

மேடையிலே யாரோ, அவருடன்இரகசியமாக ஏதோ பேசினார். ஜானகிராமன் ஒரு "பயலும் ஒண்ணும்செய்யமுடியாது சார், நம்ப பெரியாரை" நான் அங்கே போய்ப்பார்த்தேன். சர்வம் குழப்பம் அங்கே. என்று உறுதியாகக்கூறினார்.

——

# பார்வதி பி, ஏ;

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஏன்? அவளைநான் கொல்வதை நீங்கள் நேரிலே பார்த்தால், பயந்துகூவி விடுவீர்கள். ஒருவேளை மயங்கிக்கீழே வீழ்ந்து மண்டை உடைய நேரிட்டாலும் நேரிடலாம். சிலருக்கு இம்மாதிரி சம்பவத்தைக்கண்டால் பைத்யம் ஏற்படுவதுமுண்டு" என்று அவன்கூறி, பார்த்திபனையும், கொலைகாரர்களையும், தோட்டத்துப்பக்கம் அனுப்பிவிட்டுக், கதவைத் தாளிட்டுக்கொண்டான். கொஞ்சம் "தாகசாந்தி"யும் செய்துகொண்டான். பார்வதி அருகே சென்றான், அவளுடைய அழகையும் இளமையையும் கண்டான். எப்படிப்பட்ட அருமையான பொருள், இதைப்பாழாக்கி விடுவதா, என்று சிந்தித்தான். வாயிலிருந்ததுணியை முதலிலே எடுத்தான். ஆ! என்று அலறினாள் பார்வதி.

கூவாதே, கூவினால் கோபம் வரும் எனக்கு. என்று குரூரமாகக்கூறிவிட்டுக் கைகால்களிலே இருந்த கட்டுகளையும் அவிழ்த்துவிட்டான். பார்வதி மெள்ள எழுந்துநின்று அவனை வணங்கினாள்.

"ஐயா, என்மீது இரக்கம் கொண்டதற்காக என் வந்தனம். நான் இதனை எதிர்பார்க்கவே இல்லை" என்று பார்வதி பணிவாகக்கூறினாள்.

"ஆமாம், நாம் எதிர்பாராதது எத்தனையோநடக்கிறது, விநாடிக்கு விநாடி. நான் முதலிலே, திக்கற்றோர் திருச்சபைக்குவரவேண்டுமென்று கூப்பிட்டபோது, நீ இதை எதிர்பார்த்தாயா? எங்கோ பிரசங்கத்துக்குப்போகிறோம் என்று நினைத்துக்கொண்டு இங்கே வந்தாய், என்னகண்டாய்? உன்னைக்கொலெசெய்ய நாங்கள் இருந்ததை. இதை நீ எதிர்பார்த்தாயா?"

"கொலெசெய்யும் நோக்கம்உங்களுக்கு இல்லே, ஏதோ நீங்கள் அந்தப் பார்த்திபன் பேச்சைக்கேட்டுக்கொண்டு,இதைச் செய்ய ஒப்புக்கொண்டீர்கள்"

"ஆமாம், எங்களுக்கு நீ என்ன குற்றம்செய்தாய், உன்னை முன்பின் அறியமாட்டோம். உனக்கும் அந்த ஆளுக்கும் என்னமோ பகை. எங்களிடம்கூறி, அவன் தன்வஞ்சத்தைத்தீர்த்துக்கொள்ள வந்தான். இந்தக்காரியம் முடிந்தபிறகு, அவனைப் "பைசல்" செய்யும்படி வேறு யாராவதுகூறி அதற்குஏற்ற காணிக்கை கட்டினால், அவனையும்தீர்த்துவிடுவோம்"

"மற்றவர்களைப்பற்றி எனக்குத்தெரியவில்லை. உங்கள் வரையிலே நான் உறுதியாகக்கூறுவேன். நீங்கள் கொலெசெய்யவேமாட்டீர்கள்"

"பைத்யமே, நானா கொலெசெய்யமாட்டேன்?"

"ஒருக்காலும் செய்யவேமாட்டீர்கள். செய்வதாயிருந்தால், தந்திரமாக ஏதோ பேசி, அவர்களைஎல்லாம், அனுப்பிவிட்டு என் கட்டுகளை அவிழ்த்திருப்பீரா? ஐயா, உமக்கு நமஸ்காரம், உங்கள்பிள்ளைகுட்டிகளுக்கெல்லாம் பெரும் புண்யம், என் தந்தைபோல் நீர் இனிமேல், என்உயிரைக்காப்பாற்றினீர்"

"உன் தந்தையா? செச்சே, நான் என்ன அவ்வளவு வயதானவனாகவாதெரிகிறேன். நான் உன் மாமன்,"

தன்னைக் காப்பாற்றிவிடவே, கட்டுகளை அவன் அவிழ்த்தான் என்று எண்ணிய பார்வதிக்கு, விஷயம்புரியும்படி வார்த்தையாடலானான், அம் முரடன். பேச்சோடுவிட்டானா செயலிலும் இறங்கிவிட்டான். பார்வதியின்கையைப்பிடித்திழுத்துக் கட்டி அணைத்துக்கொள்ள முயன்றான். பார்வதி, "ஓ"வென அலறியபடி, அவன் பிடியிலிருந்துதப்பித்துக்கொண்டு, இங்குமங்கும் ஓடினாள்.தெருப் பக்கம்போகவிடாதபடி அவன் தடுத்துவிட்டான். புறக்கடைப் பக்கம் போவதிலோ, பயன்இல்லை, அங்கே பார்த்திபனும் அந்தப் போக்கிரிகளும் இருந்தனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

# 5-ஆண்டுகளில்!

[கடந்த 5 ஆண்டுகளிலே நடைபெற்ற சிலமுக்கியமான போர்நிகழ்ச்சிகள் இங்கே பொறிக்கப்பட்டுள்ளன. பெர்லினை நோக்கி நேசப்படைகள்போய்க்கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலே, இச்சம்பவங்களை நினைவிற்குக்கொண்டுவருவது சுவைதரும் என்ற கருத்துடன்.]

## 1939.

செப்டம்பர் 3.

போலந்தை ஜெர்மனி தாக்குகிறது, பிரிட்டனும், பிரான்சும், ஜெர்மனிமீது போர்தொடுக்கின்றன.

டிசம்பர் 17.

"கிராப்ஸ்பீ" என்ற ஜெர்மன் போர்க் கப்பல் மூழ்கடித்துக்கொள்கிறது.

டிசம்பர் 27.

இந்திய வீரர்கள் பிரான்ஸ்போய்ச் சேருகிறார்கள்.

## 1940.

ஏப்ரல் 9.

டென்மார்க், நார்வே, நாடுகளிலே நாஜிப்படைகள் நுழைகின்றன.

மே 10.

ஜெர்மன்படைகள், ஹாலந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், நாடுகளிலேபுகுந்துவிட்டன.

பிரிட்டனிலே மிஸ்டர் சர்ச்சில் முதலமைச்சராகிறார்.

மே 17.

பிரான்சிலிருந்த பிரிட்டிஷ்படைவாபீசாகிறது.

ஆகஸ்ட் 4.

இத்தாலியர், சோமாலிலந்து மீது படைஎடுக்கின்றனர்.

அக்டோபர் 28.

இத்தாலியர், கிரீஸ்மீது படைஎடுக்கின்றனர்.

## 1941.

மார்ச் 11.

இரவல் தளவாடசட்ட உடன்படிக்கையில் அமெரிக்கக் குடியாட்சித் தலைவர் ரூஸ்வெல்ட் கையொப்பமிடுகிறார்.

ஏப்ரல் 6.

ஜெர்மன்படைகள் கிரீசையும் யூகோஸ்லோவியாவையும் தாக்குகின்றன.

மே 2.

கிரீசிலிருந்து பிரிட்டிஷ்படை வாபிசாகிறது.

ஜூன் 22.

ஜெர்மனி, ரஷ்யாமீது பாய்கிறது.

ஆகஸ்ட் 14.

அட்லாண்டிக் சாசனத்தைத் தயாரிக்க, சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் சந்திக்கின்றனர்.

டிசம்பர் 7.

பெர்ல் துறைமுகம், மணிலாதீவு ஹாங்காங் ஆகியவைகள்மீது ஜப்பான் திடீரென்றுபாய்கிறது.

## 1942.

பிப்ரவரி 15.

சிங்கப்பூர் வீழ்ச்சி.

மார்ச் 7.

ரங்கூன் காலிசெய்யப்பட்டது.

ஏப்ரல் 6.

இந்தியாமீது முதன் முதலாக ஜப்பானியர் குண்டு வீசுகின்றனர்.

அக்டோபர் 23.

எல்—அலாமீன் (வடஆப்ரிக்கா)னில் நேசநாட்டுத் தளபதி மாண்ட்காமரிதாக்குகிறார்.

நவம்பர் 8.

வடஆப்பிரிக்காவில் நேசப்படைகள் இறங்குகின்றன.

## 1943.

பிப்ரவரி 2.

ஸ்டாலின் கிராடில், ஜெர்மன் படை சரணகதி!

மே 12.

வடஆப்பிரிக்காவில் நாஜியின் ஆட்டம் அடங்கிவிட்டது.

ஜூலை 10.

சிசிலியில் நேசப்படை தாக்குகின்றன.

ஜூலை 10.

முசோலினி ராஜி நாமா!

செப்டம்பர் 3.

இத்தாலியில் நேசப்படைபுகுந்தது!

செப்டம்பர் 8.

நிபந்தனையின்றி இத்தாலி சரணகதி!

அக்டோபர் 13.

இத்தாலி, ஜெர்மனிமீது போர் தொடுக்கிறது.

நவம்பர் 28.

டெஹ்ரான் மாநாடு; சர்ச்சில்—ஸ்டாலின்—ரூஸ்வெல்ட் சந்திப்பு.

## 1944

ஜனவரி 23.

ரோம் நகருக்குத் தெற்கே நேசப்படை புகுந்தது.

பிப்ரவரி 28.

அரக்கான் போர்முனையில் ஜப்பான் படை வாபீஸ்.

மார்ச் 21.

ஹங்கேரியை ஜெர்மனி பிடித்துக்கொள்கிறது.

ஏப்ரல் 3.

ருமேனியாவுக்குள் ரஷியப்படை புகுந்தது.

ஏப்ரல் 10.

ஒடேசாவை ரஷியப்படை மீட்டது.

ஜூன் 4.

ரோமாபுரி விடுதலை பெறுகிறது.

ஜூன் 6.

வடபிரான்சில் நேசப்படைகள் வந்து சேருகின்றன.

ஜூன் 8.

கேன் நகரை நேசப்படைகள் பிடிக்கின்றன.

ஜூலை 20.

இம்பால் போர் முனையிலிருந்து ஜப்பானியர் ஓட்டம்.

ஆகஸ்ட் 3.

வடபர்மாவில், மீத்கியானா என்ற இடத்தை நேசப்படைகள் பிடிக்கின்றன

ஆகஸ்ட் 15.

தென்பிரான்சிலே நேசப் படைகள் புகுந்தன.

ஆகஸ்ட் 23,

மார்சேல்ஸ்லை நேசப் படைகள் பிடித்துவிட்டன.

ஆகஸ்ட் 24.

ருமேனியா, சமாதானம் கோருகிறது.

ஆகஸ்ட் 25.

பாரிஸ் விடுதலை!

ஆகஸ்ட் 27.

பல்கேரியா, சமாதானப் பிச்சை!

ஆகஸ்ட் 29.

ருமேனியாவின் சேர்த்தியாய்ந்த ஒப்பட்

(12ம் பக்கம் பார்க்க)

## 5-ஆண்டுகளில்!

11-ம் பக்கத்தொடர்ச்சி

ரோல் ஊற்று உள்ள பிளாஸ்ட்டி நகரை, சோவியத்படை பிடிக்கிறது.

**ஆகஸ்ட் 30.**

கான்ஸ்டான்சா, ருவான் நகர்கள் பிடிபட்டன.

**ஆகஸ்ட் 31.**

புகாரெஸ்ட் நகருக்குள் ரஷியப்படை! வெர்டுன் நகரை அமெரிக்கப்படை பிடிக்கிறது.

**செப்டம்பர் 1.**

நேசப்படைகள் பெல்ஜிய எல்லையைச் சேருகின்றன.

### பிறகு!

ஆச்சன், சார்பிரக்கன், என்ற ஜெர்மன் நகரங்களை நேசப்படைகள் பிடித்துவிட்டன.

### இனி!

பெர்லின் பிடிபடும் நாளை எதிர்பாருங்கள்!

---

## ஜஸ்டிஸ் ஜானகி.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பத்திரிகைஆபீஸ்மாடிமீது இருவரும் ஏறினர், உள்ளே ஒரே சிரிப்பும் பேச்சும், பலமான சத்தம், எனவே இவர்கள் காலடிச்சத்தம் அவர்களுக்குக் கேட்கவில்லை. குழப்பமாகஇருந்த கூச்சலிலே, ஜஸ்டிஸ் ஜானகியின் செவியிலே சில வாசகங்களே தெளிவாகவிழுந்தன.

ஒருகுரல், "பெரியாரே, திராவிடஸ்தானில் முதல்தலைவர் என்று சொன்னேன், இதோ இந்தப்பயல்கூட என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான், என் "பிளாக்" இவனுக்குத்தெரியுமா! ஒரு அடி அடிச்சதும், ஒரே கிளாப்ஸ்!"

ஜஸ்டிஸ்ஜானகி யோசித்தான், பெரியாரிடம் அவ்வளவு அன்புகொண்ட கூட்டந்தான்போலும் சேலத்தில். சண்டே அப்சர்வரே, சேலத்தில் பெரியாரை அவ்வளவுபுகழ்ந்துவிட்டு, இப்போது, அவருக்கு எதிரிடையாகக் கட்சிசேர்த்தால் இந்த ஆசாமியைநம்பியார்சேருவார்கள்" என்று எண்ணியபடி மாடிப்படியிலேயே நின்றார் ஜஸ்டிஸ் ஜானகி.

"இந்த ஆபீசைக்கூட இனி வேறே இடத்துக்கு மாற்றிவிடவேண்டும், இனி மேல் வருகிறவர்கள் போகிறவர்கள் அதிகமாகும்" என்று வேறோர்குரல் கேட்டது.

"திவான்பகதூர் தேவபூஷணத்தை வைஸ்பிரிசிடெண்டாகப் போட்டுவிட்டால், அவருடைய பங்களாவிலேயே ஆபீஸ்நடத்தலாம்" என்று மற்றுமோர் குரல் சந்தோஷமாகக் கூறிடக்கேட்டான் ஜானகி.

பிறகு, யாராரை, ஜஸ்டிசில் பிரமுகர் என்று ஜானகிகருதினாரோ அவர்களில் பலரைப்பற்றி அர்ச்சனைகள் நடந்தன.

"அவனா? சுத்தஇடியட்"

"பாலிடிக்சேதெரியாதே"

"கவர்னரைக் கண்டாலே நடுங்குவானே"

"சுத்த பிசினாரியாச்சே, பணமே தரமாட்டான்"

இதென்ன வேடிக்கை! இங்கே, இப்படி ஒவ்வொரு "தலைவருக்கும்" அர்ச்சனை நடக்கிறதே, கட்சியை எப்படி நடத்துவது, அதிலும் அந்தச் சு. ம.க்களுக்கு எதிராக, என்று எண்ணினான் ஜானகி, ஏதோபேசவாயெடுத்த ஜமதக்னியையும் மௌனமாகஇருக்கச்சொல்லிவிட்டான்.

"அதெல்லாம் சரி, மிஸ்டர் நெட்டோ எப்படி?". இதற்குப்பதில், "வெங்காயம் எப்படி, வெள்ளைப் பூண்டு எப்படி? என்றுகேள். நீ எப்படிஇருப்பாய்அதைச் சொல்லேன். நீதான், அவன் காஞ்சீபுரத்திலிருந்துவந்ததும், இங்கே நடப்பதை எல்லாம்போய்ப்பாடம் ஒப்புவித்துவிடுகிறாயாமே,"

"யார்சொன்னது?" இந்தக் கேள்வியிலே கொஞ்சம்கோபம்.

"இதோபார், சும்மா ஏய்க்காதே."

"அது என் வழக்கமில்லை"

"என் வழக்கமா அது"

"யாருக்குத்தெரியும்?"

இதற்குள் ஒருசமாதானப்பிரியர், "சரி! சரி! நமக்குள் ஏன் வீண்பேச்சு"

ஜஸ்டிஸ் ஜானகிக்கு மயக்கம்வந்துவிடுவதுபோலாகிவிட்டது.

"கடைசியாக யாரைத்தான் தலைவராகப்போடுவது' என்றார் ஒருகாரியப்பிரியர்.

"சர். சண்முகத்துக்கு என்ன?"என்று கேட்டார் ஒருவர்.

"அதைத்தான் அந்த ஆசாமி கெடுத்துவிட்டாரே. என்ன அன்யாயம். தெரியுமா? எதுவோ, கூட்டத்தினுடைய நிலைமையைப்பார்த்து நாயக்கரைப் புகழ்ந்துபேசினது சரி, ஒழியட்டும். சர். சண்முகத்தை ஏன் துரோகின்னு சொல்லவேணும்? இது அந்தஆள் காதிலே விழுந்திருக்குமே, இப்ப, நாம்கூப்பிட்டா அந்தஆள் வருவாரா?"

"வரவேண்டாம், போயேன்"

"பொப்பிலியையும் கண்டிச்சுப்பேசியாச்சி."

"ஆமாம்!"

"வேறுயாருதான்? குமாரராஜா கூடாது"

"ஆமாம்"

"என்ன, எதுக்கும் ஆமா ஆமான்னு! யாரைத்தான் தலைவராகப்போடுவது"

இடைமறித்தார் வேறொருவர். "வீணா என்பலபேரைத்தேடணும். நம்மளவரே தான் லீடராயிடட்டுமே"

"அப்போதான் இந்தப் பணக்காரப் பயல்களை பட்டம் பதவிவேணுமென்ற ஆசைஉள்ளவனுங்களே, நம்மஇஷ்டப்படி ஆட்டிவைக்கமுடியும். சர்க்காரிலே எப்படியும் யாரோசிலருக்குப்பட்டம்தரத்தான் தருவாங்க. பட்டத்தைப்பெற்றவன்கிட்ட, நம்மபண்டியை அனுப்பினா, நம்மாலேதான் கிடைச்சுதுன்னு ஒரு போடு போடுவார்"

"பண்டிக்கா புளுகத்தெரியாது"

பண்டிசிரித்துக்கொண்டே "எல்லாம் உனக்காகத்தானேய்யா"

"ஆமாம்!இப்பஎனக்கென்றுசொல்றே, நாலுமாசத்துக்கு முன்னாலே, டாக்டர் கூடசேர்ந்துகிட்டு டமாரமடிச்சே. அதுக்குமுன்னாலே குமாரராஜா திருவடிகளே சரணம்னுகிடந்தே"

"இதேதான்! காஞ்சீபுரத்தான், பண்டியைப் பார்க்கும்போதெல்லாம் இதேதான் சொல்றதுவழக்கம்'!

"எல்லாம் அப்படித்தான் சார்! இவ்வளவுபேசறாரே எடிட்டர், இவர் திரியலையா பெரியார், பெரியாரின்னு அவர் பின்னாலே"

"பண்டி! நான் திரியரதுக்கும் நீ திரியரதுக்கும் வித்தியாசம் இருக்கு"

"அதுதான் வேண்டாம்னேன், அந்த மாதிரிதான் ஆளைக்கீழ்வெட்டா பேசாதேன்னேன். உனக்குத்தெரியாது, முன்னாலேயெல்லாம், நாயக்கருகூட நான் சேர்ந்துவேலைசெய்திருக்கேன், கேட்டுப்பாரு என்னிடம் அவருக்கு எப்பவும், ரொம்பமதிப்பு"

( 10-ம்பக்கம் பார்க்க )

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.